# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 தை 2 செவ்வாய்க்கிழமை (15-01-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:51



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் சிறப்புச் சேகரிப்புப் பகுதி




கொழும்பு - கண்டி 'இன்ரசிற்றி' கடுகதி ரயில் நேற்றுமுன்தினம் காலை ரம்புக்கனை கிரிவலப்பிட்டியவில் தடம் புரண்டதில் 14பேர் உயிரிழந்தனர்; இருநூறுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். வேகமாகச் சென்றுகொண்டிருந்த சமயம் தடம்புரண்ட ரயில் பெட்டிகளில் சிலவற்றை மேலே காணலாம். (செய்தி 4ஆம் பக்கத்தில்)

# வடக்கிலும் கிழக்கிலும் உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்படலாம்

## தமிழர் கூட்டமைப்பின் கோரிக்கையை சாதகமாகப் பரிசீலிக்க அரசு இணக்கம்

கொழும்பு,ஜனவரி15

**மார்ச் மாதத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலை வடக்கு - கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - நடத்தாமல் ஒத்திவைக்கும்படி நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை சாதகமாகப் பரிசீலிக்க அரசு இணங்கியிருக்கின்றது.**

கூட்டமைப்பின் எம்.பிக்கள் குழு ஒன்று அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேசிய போதே மேற்படி கோரிக்கையை முன் வைத்ததாகத் தெரியவருகின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் இந்தச் சந்தர்ப்பத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள் அவசியமற்றவை என்றும் -

வடக்கு - கிழக்கில் இப்போது அவசரமாகத் தேர்தல் நடத்துவதை விடுத்து தீர்வு முயற்சியில் அதிக சிரத்தை காட்டப்படவேண்டும் என்றும்-

கூட்டமைப்புப் பிரதிநிதிகள் பிரதமரிடம் வலியுறுத்தினர்.

அவர்களது கருத்தைச் சாதகமாகப் பரிசீலிப்பதாகக் குறிப்பிட்ட பிரதமர் கிழக்குத் தேர்தல்களில் ஐ.தே. கட்சி, பொ.ஐ.முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவையும் சம்பந்தப்பட்டிருப்பதால் இந்த விடயம் குறித்து அவற்றுடனும் கலந்தாலோசிக்கவேண்டியிருக்கும் என்றும் கூறினார்.

விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு வருவதால், அவர்களது இணக்கமின்றி வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை இப்போதைய நிலையில் நடத்துவதற்குப் பிரதமர் விரும்பவில்லை என்றும் -

எனினும் வடக்கு - கிழக்கில் தற்போதுள்ள உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக் காலத்தை நீடிக்கா

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஹிரோசிமா போன்று தென்மராட்சி அழிவுகள்!

### நேரில் பார்த்த ஜயலத் கருத்து

வடமராட்சி,ஜன.15

"அணுகுண்டினால் அழிந்துபோன ஹிரோசிமா நகரம் போன்று தென்மராட்சிப் பகுதி காட்சியளிக்கின்றது" - என்று, புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

தென்மராட்சிப் பகுதிக்கு நேற்று மாலை சென்ற அமைச்சர் அங்கு ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்ட பின்னர் ஊடகவியலாளர் மத்தியில் பேசுகையில் இப்படிக் கூறினார்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன், வன்னிப் புனர்வாழ்வு துணை அமைச்சர் நூர்தீன் மசூர் ஆகியோரும் அவருடன் அங்கு சென்றிருந்தனர்.

பருத்தித்துறையில் இருந்து வரணி, கொடிகாமம் ஊடாக சாவகச்சேரி, கைதடி ஆகிய பகுதிகளுக்கும் அமைச்சர் குழு சென்றிருந்தது. அதன் பின்னர் ஊடகவியலாளர் மத்தியில் பேசியபோதே அமைச்சர் மேலும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஜயலத் குழு திரும்பியது

யாழ்ப்பாணத்தில் இருநாள் விஜயத்தை முடித்துக்கொண்டு புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவும் அவரது குழுவினரும் நேற்று மாலை கொழும்பு திரும்பினர்.

நேற்றுக் காலை நல்லூரில் நடந்த பொங்கல் விழாவில் கலந்துகொண்ட அமைச்சர் பின்னர் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதைத் தொடர்ந்து பருத்தித்துறைக்குச் சென்ற அமைச்சர் துறைமுகப் பகுதிக்குச் சென்று அங்கு பொருள்கள் இறக்கும் பணிகளைப் பார்வையிட்டார். அதன் பின்னர் ஹாட்லிக் கல்லூரியில் மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். பின்பு தென்மராட்சிக்குச் சென்றார்.

கொழும்பு புறப்பட முன்னர் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அவர் விஜயம் செய்தார். (உ-3-31-117-173)

## றுகுணு மருத்துவ மாணவருக்குத் தடை

கொழும்பு,ஜன.15

றுகுணு பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்துக்குள் செல்வதற்கு மறு அறிவித்தல் வரை தடைவிதிக்கப்பட்டுள்ளது.

காலி, கரப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் தாதிகள் சிலரை மருத்துவ மாணவர்கள் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவத்தை அடுத்தே, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ரஞ்சித் சேனநாயக்க தெரிவித்தார். (உ-3-6-ரி)

## முன்னாள் பிரதி அமைச்சர் விரைவில் கைது!

கொழும்பு,ஜன.15

தேர்தல் காலத்தில் இடம்பெற்றதாகக் கருதப்படும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக முன்னாள் சுற்றுலா, விமானப் போக்குவரத்துப் பிரதி அமைச்சர் சாந்த பிரேமரட்ண விரைவில் கைது செய்யப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவருக்கு எதிராக மிகுந்தலை விகாரையின் சிரேஷ்ட தேரா உட்படப் பலர் பொலீஸில் முறைப்பாடு செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

## எரிபொருள் வியாபாரிகள் மீது இன்று முதல் அதிகாரிகள் பாய்ச்சல்!

யாழ்ப்பாணம்,ஜன.15

குடாநாட்டில் சட்ட அங்கீகாரம் இன்றியும் அதிக விலையிலும் மண்ணெண்ணெய், பெற்றோல் முதலிய எரிபொருள்களை விற்பனை செய்யும் இடங்கள் மீது யாழ்.செயலக விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் இன்று முதல் அதிரடிப் பாய்ச்சல் நடத்தவிருக்கின்றனர்.

பொலீஸாரின் பாதுகாப்புடன் இந்த நடவடிக்கை சகல பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் முகவர்களாக நியமிக்கப்படாத - தெரு வோரங்களிலும் - கடைகளிலும் வைத்து எரிபொருள் விற்பனை செய்கின்ற - ஆள்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி யாழ்.நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா விடுத்த உத்தரவை நடைமுறைப்படுத்தும் விதத்தில் இந்த நடவடிக்கை இன்று முதல் மேற்கொள்ளப்படவிருக்கின்றது. (உ-3)

## பாதுகாப்புச் செயலர் வவுனியாவுக்கு விஜயம்

வவுனியா,ஜன.15

வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதி மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையை இன்று முதல் ஓரளவு தளர்த்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள முடிவை அடுத்து -

இது விடயமாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ நேற்றுமுன்தினம் வவுனியாவுக்குச் சென்றார்.

வன்னிக்குப் பொருள்கள் அனுப்புவதற்கான ஒழுங்குகள் குறித்து படை அதிகாரிகளுடன் அவர் ஆராய்ந்தார்.

வவுனியாவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள எரிபொருள் விநியோக கட்டுப்பாடுகளை இன்று முதல் நீக்குவது பற்றிய அறிவுறுத்தல்களை படை அதிகாரிகளுக்கு அவர் வழங்கினார். (உ-3)

## புலிகள் பிரதேசத்தில் மகிழ்ச்சிப் பொங்கல்

வவுனியா,ஜன.15

வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு பொருள்கள் எடுத்துச்செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளதையடுத்து -

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அங்கு பொங்கல் பண்டிகை நேற்றுச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதாக வன்னிச் செய்திகள் தெரிவித்தன.

வவுனியாவில் இருந்து பொருள்களை ஓரளவு எடுத்துச்செல்ல அனுமதி வழங்கப்பட்டதால் பொங்கலுக்குத் தேவையான பொருள்கள் புலிகளின் பகுதிக்கு கணிசமான அளவு எடுத்துவரப்பட்டதாகவும் -

மக்கள் அவற்றைக் கொள்வனவு செய்து பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடியதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணியம் வித்தியாலய மைதானத்தில் பொங்கல் பானை வடிவில் மிக அழகாக அமைக்கப்பட்ட அரங்கில் பண்பாட்டுப் பொங்கல் நிகழ்வுகள் இடம் பெற்றன.

தமிழீழ கொள்கை முன்னெடுப்புப் பிரிவினரின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்த நிகழ்வுகளில் ஆய்வரங்கு, பண்பாட்டுப் பவனி, கலை நிகழ்வுகள் ஆகியன இடம்பெற்றன.

விடுதலைப் புலிகளின் பிரமுகர்களான வே.பாலகுமாரன், பொன் தியாகம், பரா, ரமேஷ், ரமேஷ்அப்பா, தூயவன், ரவி, நகுலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தலைமுடி, காது, நாக்கு ஆகியவற்றுடன் கட்டி லொறியை இழுக்கும் சாகச நிகழ்ச்சியும் அங்கு இடம் பெற்றது. (உ-3)

## முல்லைத்தீவுக் கடலில் மீனவர் மீது தாக்குதல்!

வவுனியா,ஜன.15

முல்லைத்தீவுக் கடற் பிரதேசத்தில் கடந்த சனியிரவு 7.30 மணியளவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

பீரங்கிப் படகில் வந்த கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட பின்னர் ஒரு வள்ளத்தில் இருந்த இரு மீனவர்களைத் தமது படகில் ஏற்றிக் கடுமையாகத் தாக்கினர் என்றும் -

கடற்படையின் தாக்குதலையடுத்து அந்தப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஏனைய மீனவர்கள் தமது பெறுமதியான உபகரணங்களைக் கைவிட்டு அவசர அவசரமாகக் கரைக்குத் திரும்பினர் என்றும் - 'புலிகளின் குரல்' தெரிவித்தது. (உ-3)

## மட்டு. புலிகள் பிரதேசத்துக்கு உலக வங்கிக்குழு இன்று விஜயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உலகவங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆராய அந்த வங்கியின் அதிகாரிகள் குழு ஒன்று அங்கு செல்லவிருக்கிறது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் அங்கு செல்லும் குழு, தமது வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் விவசாய, நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராயும்.

நேற்று மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்த இந்தக் குழு அங்கு மேற்கொள்ளப்படும் திட்டங்கள் குறித்து அரச அதிகாரிகளுடன் ஆராய்ந்தது. (உ-3-6-ரி)



யாழ். வந்த புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் மகஜர் கையளிப்பதை முதலாவது படத்திலும் -

நல்லெண்ணத்துக்கும் சமாதானத்துக்குமான அமைப்பின் பிரமுகரான எஸ்.பரமநாதன் அமைச்சருடன் கலந்துரையாடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும் படங்களில் காணப்படுகின்றார்.

# யாழ்.மாநகரின் அபிவிருத்திக்கு நிதி வழங்க அமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம்,ஜன.15

யாழ்.மாநகர சபைப் பகுதியில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள நிதி உதவி வழங்க நடவடிக்கை எடுப்பதாக புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா உறுதியளித்தார்.

பிரதி மேயர் செ.சுந்தையன் தலைமையிலான குழு ஒன்று அமைச்சரைச் சந்தித்து மாநகரசபை எதிர்நோக்கும் பிரச்சினைகளை எடுத்துக் கூறியது.

நகரப் பகுதியில் பல்வேறு செயற்றிட்டங்கள் வகுக்கப்பட்டன. அத்திட்டங்கள் 'நால்' அமைப்புக்கு அனுப்பப்பட்டிருந்தன. எனினும் கடந்த காலத்தில் நிதி ஒதுக்கீடு எதுவும் வழங்கப்படவில்லை என்று குழு அமைச்சரிடம் எடுத்துக் கூறியது.

மாநகரசபைக்கு வாகனம் ஒன்றை உடனடியாக வழங்குவதாக அமைச்சர் தெரிவித்தார்.

உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்ய முடியாத நிலையில் உள்ளோம். வெளிநாட்டு, உள்நாட்டு, அரசசார்பற்ற அமைப்புக்களுடன் கலந்துரையாடி நிதி உதவியைப் பெற நடவடிக்கை எடுத்துள்ளேன். விரைவில் மாநகரசபையின் திட்டங்களுக்கு நிதி உதவி கிடைக்க நடவடிக்கை எடுப்பேன் என்று அமைச்சர் உறுதி வழங்கினார். (ஜ-3-180)

## குடாநாட்டில் அமைதியான பொங்கல்

யாழ்ப்பாணம்,ஜன.15

குடாநாட்டில் அமைதியான சூழலில் நேற்று பொங்கல் பண்டிகையை மக்கள் கொண்டாடினர்.

கடந்த வருடங்களை விட மக்கள் உற்சாகத்துடனும் புதிய எதிர்பார்ப்புக்களுடனும் வீடுகளிலும் ஆலயங்களிலும் பொங்கி மகிழ்ந்தனர்.

எனினும் குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் அதிக விலையேற்றம் குறித்து மக்கள் மனதில் விசனமும் எரிச்சலும் காணப்படுகின்றது.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனின் ஏற்பாட்டில் நல்லூரில் பொங்கல் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. இந்த வைபவத்தில் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா, வன்னிப் புனர்வாழ்வு துணையமைச்சர் நூர்தீன் மசூர் ஆகியோரும் பங்குபற்றினர்.

இன்று மாட்டுப் பொங்கல் நிகழ்வுகள் பல இடங்களிலும் இடம்பெறவுள்ளன. (உ-10-15-180)

## பிரிவுசார விழா

யாழ்ப்பாணம்,ஜன.15

யாழ். பல்கலைக்கழகத்தின் நூலகத்தில் 25 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள மு. அருட்பிரகாசத்தைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக பிரிவுசார வைபவம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த வைபவத்தில் துணைவேந்தர், பதிவாளர், நூலகர் உட்படப்பலர் உரையாற்றுவர். (3)

# தேர்தல் காலத்தில் 'நான்' நிதி மோசடியாகக் கையாளப்பட்டதா?

## விசாரிக்கக் குழு அமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.15

தேர்தலுக்கு முன்னும் தேர்தல் காலத்திலும் குடாநாட்டில் 'நான்' அமைப்பின் நிதி கையாளப்பட்ட விவகாரம் குறித்து ஆராய குழு ஒன்று அமைக்க வேண்டும் என்று புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, அவிநாயகமூர்த்தி ஆகியோர் இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

யாழ்.செயலகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட மாநாட்டில் பேசுகையில் அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

வீ.ஆனந்தசங்கரி பேசுகையில்-

கடந்த 7 வருடங்களாக யாழ்ப்பாணத்தில் நிலவிய சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. யாழ். மாவட்ட அரச திணைக்களத் தலைவர்கள் எந்தமுடிவும் எடுக்கமுடியாத நிலையில் இருந்தனர். இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

குடாநாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசடிகள் குறித்து விசாரணை நடத்த குழு நியமிக்க வேண்டும்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு மாதாந்தம் ஆயிரத்து 250ரூபா பெறுமதியான நிவாரணமே வழங்கப்படுகின்றது. அது அவர்களுக்குப் போதுமானதல்ல. அந்தப் பெறுமதியை அதிகரிக்க வேண்டும் - என்றார்.

விநாயகமூர்த்தி பேசுகையில்-

புதிய அரசு ஆட்சிக்கு வந்ததும் தெற்கில் தடைகள் யாவும் நீக்கப்பட்டுவிட்டன. ஆனால் குடாநாட்டில் தடைகள் தொடர்கின்றன. அந்தத் தடைகள் நீக்கப்படவேண்டும்.

தேர்தலுக்கு சில தினங்களுக்கு முன்னர் இங்கு அரசசார்புக் கட்சி பல மோசடிகளில் ஈடுபட்டது. அது பற்றி ஆராயக் குழு நியமிக்கவேண்டும் - என்றார். (ஜ-3)

# தமிழர் கூட்டமைப்புக்கு மேலும் வலுச்சேர்க்க கட்சிகளிடையே ஒத்திசைவான முயற்சி தேவை

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.15

தமிழ் மக்களின் தேசிய கோரிக்கைகளுக்கு வலுச்சேர்ப்பதற்காக அமைக்கப்பட்ட தமிழ்க்கட்சிக் கூட்டமைப்புக்கு ஸ்திரமான கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி அதன் நோக்கங்களை அடைய தீவிர செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) தலைவரும் கூட்டமைப்பின் பிரமுகருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இது தொடர்பாக அவர் விடுத்திருக்கும் ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

என்னைப் பொறுத்தவரை தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கி ஒரே குரலில் பேசுவதன் மூலமும், இணைந்து செயற்படுவதன் மூலமுமே தமிழ்த்தேசிய இனப் பிரச்சினைக்கு காத்திரமான பங்களிப்பொன்றைச் செய்யமுடியும் என்பதில் தெளிவாக இருப்பதுடன், அப்படியான ஒரு கூட்டமைப்பை உருவாக்கப் பல வருடங்கள் பல முயற்சிகளை மேற்கொண்டும் வந்துள்ளோம். இவ்வாறான கூட்டமைப்புத் தொடர்பாக பழமையான, அதே சமயம் மிதவாதக் கட்சிகள் எனக் கூறிக்கொள்ளும் ஒருசில தமிழ்க் கட்சிகள், அப்படியான ஒரு கூட்டமைப்பை பெரிதாக வரவேற்றதில்லை.

ஆனால் காலத்தின் தேவை கருதியும், பல்கலைக்கழக மாணவர்கள், பொது நிறுவனங்கள், பரந்துபட்ட மக்களின் வேண்டுதல்கள், அழுத்தங்கள் காரணமாகவும் தமிழர் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது என்பதே உண்மை. தாம் விரும்பாவிடினும், இவ்வாறான அழுத்தங்கள் காரணமாகத்தான் தாம் இந்தக் கூட்டமைப்பை உருவாக்க வேண்டி ஏற்பட்டதாக இதே மிதவாதத் தலைவர்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது ஒவ்வொரு மேடையிலும் கூறி வந்தார்கள்.

மக்களின் விருப்பத்திற்கிணங்கத்தான் இக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதாக இத்தலைவர்கள் கூறுவது உண்மையாக இருந்தால், அதனை வலுப்படுத்த வேண்டியதும், அதனைச் செயற்பட வைக்கவேண்டியதும் இவர்களது கடமையாகும். ஆனால் தேர்தல் முடிந்து ஒரு மாதம் கடந்துவிட்ட பின்பும், கூட்டமைப்பு தன்னைப் பலப்படுத்திக்கொள்ள எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

தேர்தலின் பின்னர் கொழும்பில் இருக்கக் கூடிய ஒரு சில கனவான்களே இக்கூட்டமைப்பின் முதல் கூட்டத்தை கூட்டவேண்டி ஏற்பட்டது. இக்கூட்டமைப்பிற்கான தலைவரோ, செயலாளரோ அல்லது குறைந்த பட்சம் ஒரு தொடர்பாளரோ இல்லாததால்தான் இக்கனவான்கள் இக்கூட்டமைப்பு கூட்டத்தை கூட்ட நிர்ப்பந்திக்கப்பட்டனர். இக்குறைபாடுகளை நானும், ரெலோ முதல்வர் சிறீகாந்தா அவர்களும் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து, தமிழர் கூட்டமைப்பிற்கான ஒரு யாப்பைத் தயார் செய்வதாக முடிவுசெய்தோம். ஆனால் அவை இன்னும் நிறைவேறியதாக இல்லை.

இந்நிலையில் தமிழர் கூட்டமைப்பின் ஓர் அங்கத்துவ இயக்கம் என்ற வகையில் இக்கூட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான சில ஆலோசனைகளை முன்வைக்கலாம் எனக் கருதுகின்றேன்.

முதலாவதாக இக்கட்சிகள் சில அடிப்படைக் கொள்கைகளில் கருத்துடன்பாட்டுக்கு வந்தே இக்கூட்டமைப்பை உருவாக்கின. யுத்தநிறுத்தம், விடுதலைப் புலிகளின் மீதான தடை நீக்கம், வடக்கு - கிழக்கில் பொருளாதாரத் தடைகளை அகற்றல், 3ஆம் தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சு என்பதே அவையாகும். இவை தவிர தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அதனடிப்படையிலேயே பேச்சு நடத்தப்படவேண்டும் என்பதையும் இக்கூட்டமைப்பினர் அங்கீகரித்துள்ளனர்.

இவ்வடிப்படை விடயங்கள் தவிர கடல் வலயத் தடைகளை நீக்குதல், பாஸ் கெடுபிடிகளை நீக்குதல், சிறையிலடைக்கப்பட்ட இளைஞர்களை விடுதலை செய்தல், காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை நடத்தி அதற்கான தீர்வினை விரைவாகப் பெற்றுக்கொள்ளல், எரிபொருள் பிரச்சினை, உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு, விலையேற்றம், நிவாரணம் என உள்ள பல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முயற்சிப்போம் எனவும் கூறினோம்.

மேற்கண்ட விடயங்கள் தொடர்பாக சில ஆரம்ப நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டாலும், அவை ஆமை வேகத்திலேயே நடைபெறுகின்றன. கடல் வலயத் தடைகளை அகற்றவோ, பாஸ் கெடுபிடிகளை நீக்கவோ, இளைஞர்களை விடுதலை செய்யவோ அல்லது மேற்கூறப்பட்ட அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் கூட்டமைப்பானது அதற்கான பேச்சுவார்த்தைகளை, அழுத்தங்களை உருவாக்கி இருக்கவேண்டும் என மக்கள் எதிர்பார்ப்பது இயல்பானதே.ஆனால் கூட்டமைப்பிற்கு ஒரு வடிவமோ, கட்டமைப்போ, யாப்போ இல்லாமையால் அது இன்னும், இறுக்கமான ஓர் அமைப்பாக இல்லை என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். இதனடிப்படையில்தான் கூட்டமைப்பை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்க்காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ ஆகியவை இணைந்து தமிழர் ஐக்கிய முன்னணியை உருவாக்கினர். இதுவே பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியானது. இதே போன்று இன்று தமிழர் கூட்டமைப்பில் உள்ள நான்கு அமைப்புகள் இல்லையேல் மிகுதியாக இருக்கக் கூடிய தமிழ் அமைப்புக்களையும் இணைத்து ஒரு தமிழர் கூட்டு முன்னணியை உருவாக்க வேண்டும். அதற்குப் பொருத்தமான ஒருபெயரை வைத்துக்கொள்ளலாம். அது தமிழர் கூட்டமைப்பாகவோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவோ அல்லது இன்னொரு பெயரிலும் இருக்கலாம்.

எனவே இத்தமிழர் கூட்டமைப்பானது தனக்குப் பொருத்தமான ஒரு யாப்பை முதலில் தயார் செய்து கொள்ளவேண்டும். அதன்மூலம்தான் இக்கூட்டமைப்பிற்கான தலைவர், செயலாளர் முதற்கொண்டு அதற்கான உயர்மட்ட - அடிமட்ட - குழுக்களையும் அமைக்கலாம். இத்தமிழர் கூட்டமைப்பு வலுப்பெறுவதற்கு வடக்கு - கிழக்கிற்கான அமைப்புச் செயலாளரும் மாவட்ட அடிப்படையிலான அமைப்பாளர்களும் தேவை. இதன் மூலம்தான் இத்தமிழர் கூட்டமைப்பு தன்னை வடக்கு - கிழக்கெங்கும் கிராம ரீதியாக விஸ்தரிக்க முடியும்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற சகல மாவட்டங்களிலும், கூட்டமைப்பின் அலுவலகங்கள் அமைக்கப்பட வேண்டும். இந்த அலுவலகங்களில் குறைந்தபட்சம் சுழற்சி முறையிலாவது நாடாளுமன்ற அங்கத்தவர்கள் இருக்க வேண்டும். இதன்மூலம்தான் பொது மக்கள், தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள வழிபிறக்கும்.

அதுமாத்திரமல்லாமல், வடக்கு - கிழக்கில் இருக்கக்கூடிய தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மீன்பிடி, விவசாய சங்கங்கள் போன்ற சகல அமைப்புகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, தமிழ்த் தேசிய சபை ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இதன்மூலம்தான், எமது அடிப்படைக் கோரிக்கைகள் மாத்திரமல்லாமல், எமது அன்றாடப் பிரச்சினைகளுக்காகவும் போராட முடியும்.

எனவே இத்தமிழர் கூட்டமைப்புக்குத் தலைக்குமேல் ஆயிரம் சுமைகள் உண்டென்பதைப் புரிந்து கொண்டு, அவற்றை விரைவாகத் தீர்க்க நாம் முயற்சிக்க வேண்டும்.

இது எனது கருத்துக்கள் மாத்திரமல்ல கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக குடாநாட்டின் பல பாகங்களுக்கும் விஜயம் செய்து பலதரப்பட்ட மக்களுடன் பேசியதன் அடிப்படையில்தான் இந்த ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. கட்சி, இயக்க வேறுபாடுகள் இல்லாமல், மக்கள் இதனையே விரும்புகின்றார்கள். மக்களின் எதிர்பார்ப்பு, 'கௌரவமான தீர்வு, சமாதானம், அமைதியான வாழ்க்கையே தவிர கூட்டணியோ, காங்கிரஸோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்வோ, ரெலோவோ அல்ல என்பதை கூட்டமைப்பின் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தமிழர் கூட்டமைப்புச் சார்பாகத் தெரிவுசெய்து அனுப்பி இருக்கின்றார்கள் என்றால், யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை உருவாக்க நாம் சகல முயற்சிகளையும், மேற்கொள்வோம் என்பதற்காகவே என்பதையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

நாம் பழமையான கட்சிகள், எமது தனித்துவங்கள் பேணப்படவேண்டும். ஒரே அமைப்பாகவர நாம் இன்னும் பக்குவப்படவில்லை என்று யாராவது கருதினால், எமக்குள் பொது நலன்களைவிடக் குறுகிய கட்சி மனோபாவங்கள் மேலோங்கி நிற்கின்றன என்றே அர்த்தமாகும். எமது அடிப்படைக் கொள்கைகளின் முக்கியத்துவம் அதனை முன்னெடுத்துச் செல்வதன் அவசியத்தைப் புரிந்து கொண்டால், இக்குறுகிய மனோபாவங்களை நாம் களையவேண்டும்.

1977இல் அன்றைய காலத்தின் தேவையாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி உருவானது. அன்றைய தலைவர்கள் மிக நீண்ட கால பகைமையை மறந்து தமிழ் மக்களுக்காக ஒன்றுபட்டார்கள். அதேபோல் இன்று தமிழ் மக்களுக்காக நாம் ஒரே அமைப்பாக உருப்பெறவேண்டிய தேவை உள்ளது என்பதை மூத்த தலைவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

இச்சிறு கட்டுரையின் நோக்கம், தமிழர் கூட்டமைப்பை வலுப்படுத்துவதே அன்றி அதனைச் சிதைப்பதல்ல என்பதையும் நான் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

பேச்சு ஒன்று ஆரம்பிப்பதற்கான சூழல் தோன்றி இருக்கும் நிலையில் இதனைக் குழப்ப ஜே.வி.பி. போன்ற சிங்கள இனவாதக் குழுக்களும் முஷ்டியை நிமிர்த்துப்போது, நாம் ஒன்றுபட்டுச் செய்யவேண்டிய பல பணிகள் உள்ளன. சிங்கள இனவாதம் மிகச் சுலபமாக எமது உரிமைகளைத் தந்துவிடாது. பேச்சுக்களைப் பலப்படுத்தவும், எமது அடிப்படை உரிமையான சுயநிர்ணய உரிமையை

(01ஆம் பக்கம் பார்க்க)

# 3 ஆண்டுகால வரட்சியின் பின்னர் ஆப்கானிஸ்தானில் பெரும்மழை

ஆப்கானிஸ்தானில் கடந்த மூன்று ஆண்டு காலக் கடும் வரட்சிக்குப் பின்னர் தற்போது பெரும் மழை பொழியத் தொடங்கியுள்ளது. ஆப்கானியர்கள் இதற்கு முன்னர் காணாத அளவில் பெரும் மழை பெய்வதாகக் கூறப்படுகிறது.

நீண்டகாலத்தின் பின்னர் தலைநகா காபூல் உட்பட பல நகரங்களில் மழை பெய்வதால் வயது வித்தியாசமின்றி ஆப்கான் மக்கள் மழையில் நனைந்து மகிழ்வதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வரட்சியின் காரணமாக ஆப்கானிஸ்தானின் பெரும்பாலான விவசாய நிலங்கள் பாலைகளாகியிருந்தன. நீண்ட காலப் போர்களால் ஏற்கெனவே துயருற்ற ஆப்கானியர்கள் விளைச்சல் இல்லாததால் மேலும் வறியவர்களாகி இருந்தனர்.

குளிர் காலத்தில் பெய்யும் இந்த மழை வரட்சியால் தரிசான நிலங்களை விளை நிலங்களாக மாற்றுமளவுக்கு போதுமானதல்ல என்று கருதப்படுகிறது.

# நெதர்லாந்து நாட்டினர் இருவர் ஜம்மு-காஷ்மீரில் சுட்டுக்கொலை!

ஸ்ரீநகர்,ஜன.15

இந்தியாவின் காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் இருவரை இந்தியப் படையினர் நேற்றுமுன் தினம் சுட்டுக்கொன்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

கொல்லப்பட்ட இருவரும் நெதர்லாந்து கடவுச்சீட்டுகளை வைத்திருந்ததாகவும் -

ஒரு வாரத்துக்கு முன்பே இவர்கள் காஷ்மீர் வந்ததாகவும் -

அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீது அந்த இருவரும் தாக்குதல் நடத்தியதையடுத்து படையினர் மேற்கொண்ட பதில்தாக்குதலிலேயே அவர்களிருவரும் சுட்டுக் கொல்லப்பட்டதாக இந்தியப் பாதுகாப்புத்துறைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் அவர்கள் உண்மையில் சுற்றுலாப் பயணிகள் என்றும் -

காரணமின்றித் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தத் தயங்காத இந்திப் படையினர் அவர்களைக் கொன்று விட்டதாகவும் -

ஜம்முகாஷ்மீர் மனித உரிமைகள முன்னணி கூறியுள்ளது. (ஒ-4)

## சீனப் பிரதமர் இந்தியா விஜயம்

ஆக்ரா,ஜன.15

சீனப்பிரதமர் சூ ஆன்ஸி இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். கடந்த 10 ஆண்டு காலத்தில் சீனப் பிரதமர் ஒருவர் இந்தியாவுக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

இரு நாடுகளிடையேயான பொருளாதார ஒத்துழைப்பு, வர்த்தக உறவுகள் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்குடன் இந்த விஜயம் மேற்கொள்ளப்படுவதாக சீன அரசு தெரிவித்தது. (ஒ-4)

# தீவிரவாதிகள் சுட்டதில் திரிபுராவில் 14 பேர் பலி!

புதுடில்லி,ஜன.15

இந்தியாவின் திரிபுரா மாநிலத்தில் தீவிரவாதிகளின் தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் சிங்கிச்செரா நகரின் பொதுச் சந்தையைச் சுற்றிவளைத்த 20 தீவிரவாதிகள் கண்மூடித்தனமாகச் சுட்டனர். இதில் சந்தையில் நின்றிருந்த பொதுமக்களில் 6பேர் அந்த இடத்திலேயே இறந்தனர். காயமடைந்து மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட 20 பேரில் 8 பேர் பின்னர் உயிரிழந்தனர்.

பங்களாதேஷ் எல்லையில் உள்ள திரிபுராவில் பழங்குடியினரின் உரிமைகளுக்காகப் போராடிவரும் திரிபுரா தேசிய விடுதலை முன்னணி தீவிரவாதிகளே இந்தப் படுகொலைகளை நடத்தியுள்ளதாகப் பொலீஸார் கூறினர்.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்த அனைவரும் பெங்கால் மொழி பேசுபவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

திரிபுராவில் பழங்குடியினரின் உரிமைகளுக்காகப் போராடிவரும் தவிரவாத இயக்கங்கள் பெங்காலிக் குடியேறிகளைக் குறிவைத்துத் தாக்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ)



ஆர்ஜென்ரீனாவில் ஸ்பானிய வம்சாவளியினர் ஸ்பெயினுக்கு இடம் பெயர்வதற்கு அந்த நாட்டின் குடியுரிமைக்கு விண்ணப்பிப்பதற்காக ஸ்பானியத் தூதரகத்தின் வாசலில் காத்துக் கிடப்பதைப் படத்தில் காணலாம். ஆர்ஜென்ரீனாவில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடியை அடுத்து இவர்கள் தமது மூதாதையரின் நாடான ஸ்பெயினுக்குச் சென்றுவிட முயற்சித்து வருகின்றனர்.

## உலகத் தலைவர்கள் மீதான

# அல்கெய்டாவின் கொலைத் திட்டம் ஒளிநாடா ஒன்றின்மூலம் அம்பலம்

சிட்னி,ஜன.15

உலகத் தலைவர்கள் 'கோல்ப்' விளையாடும் போது, அவர்களைக் கொல்ல அல்கெய்டா அமைப்பினர் பயிற்சிபெறும் காட்சிகள் அடங்கிய ஒளிநாடாவை ஆஸ்திரேலியத் தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

'கோல்ப்' மைதானம் ஒன்றில் விளையாடிக் கொண்டிருக்கும் உலகத் தலைவர்களை படுகொலை செய்யும் விதமாக அளிக்கப்பட்ட பயிற்சிகளை ஒளிநாடாக் காட்சிகள் காட்டுவதாக ஆஸ்திரேலியாவுக்கான பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

'கோல்ட்' விளையாட்டு உபகரணங்களை எடுத்துச்செல்லும் பைகளில் தமது ஆயுதங்களை தீவிரவாதிகள் மறைத்து வைத்திருப்பதும் -

ரொக்கட் குண்டுகளைப் பயன்படுத்தித் தமது இலக்குகளை அவர்கள் தாக்குவதும் -

ஒளி நாடாவில் படமாக்கப்பட்டுள்ளன.

6 மணித்தியாலங்கள் ஓடக்கூடிய இந்த ஒளிநாடா, அமெரிக்க ஆதரவுடன் வடக்குக் கூட்டணிப்படைகள் நடத்திய தாக்குதலின்போது கைப்பற்றப்பட்டதாக ஆஸ்திரேலிய ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

வடக்குக் காபூலில் உள்ள பயிற்சி முகாம் ஒன்றில் அரபு, பாகிஸ்தான் மற்றும் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த தீவிரவாதிகள் பயிற்சி பெறுவது தரம் குறைந்த சாதனங்கள் மூலம் படம் பிடிக்கப்பட்டுள்ளதாகவும் அது கூறியது.

'கோல்ப்' போட்டியொன்றின்போது அதில் கலந்துகொள்ளும் மேற்தலகத் தலைவர்கள்மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தப் பயிற்சி பெறுவதும் ஒளி நாடாவில் உள்ளது.

ஆள்களைப் பணயக் கைதிகளாகக் கடத்துவதும் அவர்களைப் பின்னர் சுட்டுக் கொல்வதும் ஒத்திகை பார்க்கப்பட்டுள்ளது. இந்த ஒத்திகைக்கு தலிபான் பாதுகாப்பு அமைச்சின் வாகனம் உபயோகிக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கூட்டணியினரால் கைபற்றப்பட்ட இந்த ஒளிநாடா ஆஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு எவ்வாறு கிடைத்தது என்பது குறித்து தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. (ஒ)



அமெரிக்காவின் அதிபராக பில் கிளின்ரன் பதவிவகித்த போது, அவருடன் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் 'கோல்ப்' விளையாடிய காட்சி.

உலக அரங்கில்

# ஆப்கான் கைதிகளை கியூபாவுக்கு அனுப்பும் நடவடிக்கை தொடர்கிறது

காபூல்,ஜன.15

ஆப்கானிஸ்தானில் பிடிபட்ட அல்கெய்டா கைதிகளை கியூபாவில் உள்ள தனது தளத்தில் சிறைவைப்பதற்காகக் கொண்டுசெல்லும் நடவடிக்கையை அமெரிக்கா தொடர்கிறது.

தலிபான் மற்றும் அல்கெய்டா அமைப்புகளைச் சேர்ந்த 30 பேர் நேற்று முன்தினம் கியூபாவுக்கு அருகில் உள்ள குவான்டனமோ தளத்துக்கு விமானம் மூலம் கொண்டுசெல்லப்பட்டனர்.

அமெரிக்கப் படையினரின் பொறுப்பில் உள்ள கந்தகார் விமான நிலையத்திலிருந்து, சங்கிலியால் பிணைத்து வெள்ளைத் துணியால் முகங்கள் மூடப்பட்ட நிலையில் கைதிகள் போக்குவரத்து விமானம் ஒன்றின் மூலம் கொண்டுசெல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. கடந்த வெள்ளிக்கிழமை 20 கைதிகள் அடங்கிய முதற்குழு குவான்டனமோ தளத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கியூபா அருகே அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தளத்தில் ஆப்கான் கைதிகள் சிறை வைக்கப்படுவதற்கு அப்பகுதியில் உள்ள மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## அரசைக் கடுமையாக விமர்சித்து வந்த

# சுயாதீனத் தொலைக்காட்சியை மூட ரஷ்ய நடுவர்சபை உத்தரவு!

ரஷ்யாவில் சுயாதீனமாக இயங்கி வந்த கடைசித் தொலைக்காட்சி நிறுவனமும் தொடர்ந்து செயற்பட முடியாத நிலையை அடைந்துள்ளது.

நிதி நெருக்கடி காரணமாக 'ரி-பி-6' என்ற தொலைக்காட்சி நிறுவனம் மூடப்படவேண்டும் என்று நாட்டின் அதிஉயர் நடுவர் தீர்ப்பு மன்றம உத்தரவிட்டுள்ளது.

'ரி-பி-6' நிறுவனத்தின் சிறுபங்குதாரரான 'லூகோயில்' என்ற பெற்றோலிய நிறுவனம் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள 'ரி-பி-6' தொலைக்காட்சியை மூடும்படி உத்தரவிடக் கோரி தாக்கல் செய்த மனு மீதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

'ரி-பி-6' தொலைக்காட்சி ரஷ்ய அரசுக்குப் பாதகமான கருத்துக்களை தயங்காமல் வெளியிட்டதாகவும் -

அதன் முக்கிய பங்குதாரரான பொரீக் பெருஸ்வோக்கி ரஷ்ய அதிபரைக் கடுமையாக விமர்சித்து வந்ததாகவும் - கூறப்படுகிறது.

4 ஆண்டுகளுக்கு முன்னர் எடுக்கப்பட்ட பொருளாதாரப் புள்ளி விபரங்களை வைத்துக்கொண்டே தற்போதைய தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் -

இந்தத் தொலைக்காட்சியை அரசு ஓர் அச்சுறுத்தலாகக் கருதியதாலேயே இது மூடப்படுவதாகவும் -

'ரி-பி-6' தொலைக்காட்சி நிறுவனப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

அரசின் தவறுகளைச் சுட்டிக்காட்டும் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு ரஷ்யாவில் இருந்த கடைசி வழி 'ரி-பி-6' தொலைக்காட்சி என்றே பெரும்பாலான ரஷ்யர்கள் கருதுகின்றனர்.

இதேவேளை, 'ரி-பி-6' தொலைக்காட்சி மூடப்படுவதற்கு எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை என்று ரஷ்ய அரசு அறிவித்துள்ளது. (ஒ-4)

# தீவிரவாத அமைப்புகள் மீது பாக். பொலீஸ் பாய்ச்சல்!

இஸ்லாமாபாத்,ஜன.15

பாகிஸ்தானில் தடைசெய்யப்பட்டுள்ள இஸ்லாமிய அமைப்புகளுக்கு எதிரான நடவடிக்கைகளை அந்நாட்டுப் பொலீஸார் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

பாகிஸ்தானில் செயற்பட்டு வரும காஷ்மீர்த் தீவிரவாத இயக்கங்களான லஸ்கர் - இ - தொய்பா, ஜெய்ஸி மொஹமட் ஆகியவற்றுக்கும், பாகிஸ்தானிய இஸ்லாமிய அடிப்படை வாத அமைப்புகள் மூன்றுக்கும் அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் இரு நாள்களின் முன்னர் தடைவிதித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து 5 அமைப்புகளையும் சேர்ந்த தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்களைப் பாகிஸ்தான் பொலீஸார் கைது செய்து வருகின்றனர். இதுவரை சுமார் இரண்டாயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் அலுவலகங்கள் சீல் வைக்கப்பட்டு, அங்கிருந்த ஆவணங்கள் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

லஸ்கர் - இ - தொய்பா, ஜெய்ஸி மொஹமட் ஆகிய அமைப்புகள் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள ஆசாத் காஷ்மீரிலும் தடைசெய்யப்படுமென அப்பிரதேசப் பிரதமர் சர்தார் சிக்கந்தர் ஹயாத் கான் தெரிவித்தார்.

பாகிஸ்தானிய அதிபரின் உரையை தான் முற்றுமுழுதாக ஆதரிப்பதாகவும் -

அதன்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் -

அவர் கூறினார். (ஒ)

## ஐ.நா.அமைப்பு கோரிக்கை

நியூயோர்க்,ஜன.15

பிரிட்டனில் புகலிடம் கோரி அரசியல் தஞ்சமடைந்த சிம்பாப்வேயைச் சேர்ந்தோரை அவர்களது நாட்டுக்குத் திருப்பி அனுப்புவதை நிறுத்தும்படி பிரிட்டிஷ் அரசிடம் அகதிகளுக்கான ஐ.நா.அமைப்பு கோரியுள்ளது.

திருப்பி அனுப்பப்படுபவர்களுக்கு சிம்பாப்வேயில் உயிராபத்து நேரும் என்றும் அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது. (ஒ-4)

எல்லோருக்கும் எமது அன்புகலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!
நீங்கள் பலாலி
யாழ். சேவையில் விளம்பரம் செய்ய விரும்புகிறீர்களா?
பிறந்தநாள் – வர்த்தக விளம்பரம் – மரண அறிவித்தல்
எதுவானாலும் எமக்குப் போன் செய்யுங்கள்.

மூர்த்தி விளம்பர சேவை
114/19. நாவலர் வீதி (தேவி அச்சக ஒழுங்கை). யாழ்ப்பாணம்.
போன்: 2789
(97066)



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது
தைத்திருநாள்
பொங்கல் நல்வாழ்த்துக்கள்!



# சீயான் ரேடர்ஸ்

பிரதான வீதி, அச்சுவேலி.
எம்மிடம் சகலவிதமான அழகுசாதனப்
பொருள்களும் அன்பளிப்புப் பொருள்களும்
பாடசாலை உபகரணங்களும்
நவீன பாணியிலான காலணிகளும்
பெற்றுக்கொள்ளலாம். (C/20147)


# வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழக நூலக சேவையில்
25 வருடகாலத்துக்குமேல் அரும்பணியாற்றி
ஓய்வுபெற்றுள்ள

## திரு.மு.அருட்பிரகாசம்

அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.
பிரியாவிடை நிகழ்வு நாளை(16-01-2002) புதன்கிழமை பி.ப.
3.30 மணிக்கு நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

பல்கலைக்கழக ஊழியர் சங்கம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(97027)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 08 - 05 - 1923

ஆண்டவன் அடியில் 26 - 01 - 2001



அமரர்
## கதிர்பிள்ளை குட்டித்தம்பி

திதி: 15-01-2002

பாசமிகு தந்தையாய்
பாரினில் எமை வளர்த்து
பல சிறப்புப் பெற்று நாம் வாழ
வழி அமைத்தீர்களே ஐயா!
ஓராண்டு மட்டுமல்ல ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் உங்களை மறப்போமா?
என்றென்றும் பார்த்திருந்த
உங்கள் ஒளிமுகத்தைக்காண
விழி மூடாமல் காத்திருப்போம்!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:*

*மில் வீதி,*
*இலையாணன், உடுப்பிட்டி.*

மனைவி, மகள்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். (97024)

## ஆயுர்வேத சிகிச்சையில் நாட்டம்

ஊர்காவற்றுறை,ஜன.15

எழுவைதீவில் உள்ள பிரதேச சபை உப அலுவலகத்தில் இயங்கும் ஆயுர்வேத வைத்திய நிலையத்தில் கடந்த ஆண்டு பல்வேறு நோய்களாலும் பாதிக்கப்பட்ட 9 ஆயிரத்து 646 நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளமை வைத்தியசாலையின் புள்ளிவிவரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

இப்பிரதேசத்தில் ஆயுர்வேத மருத்துவத்திற்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருப்பதாகவும், இம் முறை மூலம் சிகிச்சை பெறுவதையே அவர்கள் பெரிதும் விரும்புவதாகவும் மேற்படி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் இப்பிரதேசத்தில் ஆங்கில மருத்துவ வசதிகள் இல்லாத போதும் இங்குள்ள குடும்ப சுகாதார நிலையத்தில் பிரதி வியாழக்கிழமைகளில் மட்டும் ஆங்கில வைத்திய சிகிச்சை நடைபெற்று வருகிறது.

இத்தீவில் சுமார் 167 குடும்பங்களைச் சேர்ந்த 600 பேர் வசித்து வருகின்றனர்.

(ஐ-16)

## சோரன்பற்று கணேசா வித்தி. வேறிடத்தில்!

யாழ்ப்பாணம்,ஜன.15

பளை சோரன்பற்று கணேசா வித்தியாலயம் நாளை புதன்கிழமை முதல் பருத்தித்துறை - சாவகச்சேரி வீதியில் அமைந்துள்ள டால்ரன் கல்வி நிறுவனத்தில் இயங்குவுள்ளது என்று வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார்.

பழைய இடத்தில் இருந்து இடம்பெயர்ந்தபின் இன்றுவரை இந்தப் பாடசாலை கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-6)

## ஞானச்சுடர் ஆன்மீக மலர் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜன.15

தொண்டமனாறு சந்நிதியான் சைவ, கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் 'ஞானச் சுடர்' ஆன்மீக மாத இதழின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை பேரவை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் இன்னிசை நிகழ்ச்சிகள், சமயச் சொற்பொழிவுகள் உட்பட பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறும்.

பிரதி ஞாயிறு தோறும் பேரவையினால் நடத்தப்படும் இலவச மருத்துவ சிகிச்சைகளில் மகப்பேறு நிபுணரின் சேவையும் அன்றைய தினம் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7)

## ரம்புக்கனை அருகே ரயில் விபத்தில் 14 பேர் உயிரிழப்பு

கொழும்பு,ஜன.15

நேற்றுமுன்தினம் காலை 7.30 மணியளவில் கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரயில் ஒன்று ரம்புக்கனை அருகே தடம்புரண்டதில் 14 பேர் கொல்லப்பட்டனர்; இருநூறுக்கும் அதிகமான பயணிகள் படுகாயமடைந்தனர்.

இந்தக் கோரச் சம்பவத்தில் காயமடைந்த அனைவரும் உடனடியாக ரம்புக்கனை, கேகாலை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்தில் 7 ரயில் பெட்டிகள் முழுமையாகச் சேதமடைந்தன.

விபத்து நடந்த இடத்துக்கு உடனடியாக விரைந்த பொலிஸாரும் அப்பகுதி மக்களும் மீட்புப் பணிகளை மேற்கொண்டனர்.

இவ்விபத்துக் குறித்து கேள்வியுற்ற பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன சம்பவ இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

பிரேக் சரியாக இல்லாததனாலேயே இந்த ரயில் தடம்புரண்டது எனவும் -

இந்த ரயிலுக்கு பிரேக் சரியாக இல்லை என்று ஏற்கனவே சாரதிகள் சுட்டிக்காட்டியிருந்தும் அதனைச் சரிபார்ப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தவறிவிட்டனர் எனவும் -

ரயில்வே திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(மு-4)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 10 - 07 - 1961

மறைவு 25 - 01 - 2001



## திருமதி சமரக்கொடி இராஜேஸ்வரி

*(அராலி கிழக்கு, அராலி)*

ஓராண்டு ஓடி மறைந்துவிட்டது பாசமிகு தாயே!
உன்னுடைய பாசமுகத்தை மறப்போமா அம்மா!
நீர்க்கதியாகிவிட்ட நாம் நிதமும் அழுது அழுது
கண்களில் நீரும் வற்றிவிட்டது தாயே!
ஒருமுறை ஓடி வாராயோ அம்மா உன் திருமுகம்
காட்டமாட்டாயா? துடிக்கின்றோம் நாம்.
ஆத்மா சாந்தியடைவதாக!

*தகவல்:*
அராலி A.பிரபா. (96928)

*பிரிவுத் துயரில் வாடும்:*
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 11 - 09 - 1947

உதிர்வு 19 - 01 - 1999



## அமரர் செல்வராசா செல்வலிங்கம்

*(கிராம உத்தியோகத்தர், அல்வாய் வடமேற்கு)*

அன்போடு எம்மை அரவணைத்த அப்பாவே!
அவனியிலே நீர் பிரிந்து மூன்றாண்டுகள் ஆனதுவோ!
எந்நாளும் எம்முயர் வாழ்வுக்காய் உழைத்தவும்மை
நன்றியோடு யாம்மறவோம் நானிலத்தே யென்றும்!

\- குடும்பத்தினர்.

*செ.சர்மிளா (மகள்)*
*கலைப் பீடம்,*
*யாழ்.பல்கலைக்கழகம்)*
*மலர்மகால், அல்வாய்.*

தகவல்:
செ.சாம்பசிவம் (மகன்)
*(உயிரியல் விஞ்ஞானப்பிரிவு, விஞ்ஞான பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)*

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்
## நன்றி நவிலலும்

விதையாய் 1932 ☆ 05 ☆ 16

சிதையாய் 2001 ☆ 12 ☆ 16



அமரர்
## சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

*(நெடுந்தீவு)*

அன்பெனும் உணவு கொண்டு அறிவெனும் பசியகற்றி
எண் பெரும் திசைகளெங்கும் ஏற்ற நல் உயர்வு பெற்று
கண்ணும் ஒளியும்போல கலந்துநல் உறவு கண்டு
திண்மையாய் நாங்கள் வாழ செய்த எம் தலைவா எங்கே?
கண்ணியமான வாழ்வால் கலந்திட்டீர் பலரின் நெஞ்சில்
புண்ணிய முதலாய்ப் பூமிப் பரப்பினில் வாழ்ந்திருந்தீர்
நண்ணிய போதிலெல்லாம் நயம் பெறு மொழிகள் ஈந்தீர்
எண்ணிய வாழ்வு ஈந்த எந்தலே உம் நினைவில் வாழ்வோம்!

எமது அன்புத்தெய்வம் அமரர் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (15. 01. 2002) செவ்வாய்க்கிழமை அதிகாலை 5. 00 மணிக்கு நெடுந்தீவு மேற்கு பெரிய துறை தீர்த்தக்கரையில் நடைபெறும். சபிண்டீகரணக் கிரியைகள் மு. ப. 10. 00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி கேட்டதும் வந்து ஆறுதல் கூறியும், உதவிகள் புரிந்தும் அனுதாபச் செய்திகள், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செய்தும், தந்திகள், தொலைபேசி, தொலைநகல் மூலம் எம்துயரைப் பகிர்ந்துகொண்டவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் எமக்கு உதவிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றிகள் உரித்தாகுக.

*'துவாரகை'*
*முதலாம் வட்டாரம்,*
*மேற்கு நெடுந்தீவு* (97026)

*பிரிவால் துயருறும்:*
மனைவி, மக்கள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

## உதயன்

### அமைதி பிறக்க....!

"நல்ல போதனைகள் - வழிகாட்டல்கள் - மனிதர்களை வழிப்படுத்தக் கூடியன. இவ்வாறான போதனைகள் இன்மையே எமது நாடு இன்று எதிர்நோக்கியிருக்கும் அவலங்களுக்கும் மனிதர் மிருகங்களாக மாறியிருப்பதற்கும் காரணம்."

- இவ்வாறு ஆதங்கம் தெரிவித்திருக்கின்றார் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள். சைவமும் தமிழும் ஓங்க அறப்பணியாற்றும் இப்பெருந்தகையின் கூற்று எங்களது இன்றைய வாழ்வை அப்படியே படம்பிடித்துக்காட்டுகின்றது.

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதியின் பீடாரோஹணை விழாவில் உரையாற்றும்போதே இந்த விடயத்தை அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

சமூக வழிப்படுத்தலுக்கான மதங்களின் கடமையை, மதத் தலைமைத்துவத்துக்கான ஒரு நிகழ்வில் - சரியான இடத்தில் - அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

வெறும் சமயக் கிரியைகளும், பூசைகளும், வழிபாடுகளுடன் மட்டும் மதங்களின் கடமை முடிந்துவிடுவதில்லை. வெறும் ஆசாரங்களை மட்டும் கடைப்பிடிப்பதன் மூலம் மதத்தலைவர்களாக - மத வழிகாட்டிகளாக - மாறிவிடமுடியாது.

சமூகத்தை அதன் ஒழுக்க நெறிமுறை என்ற தடத்திலே வழிப்படுத்துபவையாக மதங்கள் அமையவேண்டும். அதுதான் மதங்களின் இலக்காக - நோக்காக - அமையவேண்டும். இந்த விடயத்தில் சமூகத்தை - நாட்டை - ஏன் முழு உலகையுமே - வழிப்படுத்தும் பெரும் பொறுப்பு சமயங்களைச் சார்ந்ததாகிவிடுகின்றது.

ஆனால், பெரும்பாலான மதங்கள் இந்தக் கடப்பாட்டிலிருந்து விலகி மதப்பூசலுக்கும், ஒழுக்கக்கேடான சமூக வாழ்வுக்கு மக்களை அனுமதிக்கும் வழிகாட்டி நிற்கின்றன.

மதப்பிடிப்பு மதமாகவும் -
அது காட்டும்நெறி வெறியாகவும் -
சமய வழிப்படுத்தல்கள் சமயத்துக்கு அனுஷ்டிக்கப்படுவனவாகவும் -
மாறியிருப்பது வேதனைக்குரியது.

போரினாலும் ஏனைய அவலங்களினாலும் நலிவுற்றிருக்கும் நமது சமூகத்துக்கு - நமது நாட்டுக்கு - இன்று அமைதி தேவை; சமாதானம் அவசியம். அதற்கான வழிப்படுத்தல்களை மேற்கொள்வதில் மதங்களுக்கு முக்கிய பங்கு உண்டு.

சமாதானத் திசையில் நாடு செல்வதற்கு நமது சமூக, அரசியல் தலைவர்கள் பொறுப்புணர்வு மிக்க வழியில் - உரிய முறையில் - நெறிப்படுத்தப்படவேண்டும். அந்தக் கடமை மதத் தலைவர்களைச் சார்ந்தது. ஆனால் நம் நாட்டிலோ மதத் தலைவர்கள் அந்தப் பொறுப்புணர்வை விட்டு விலகி, தாமும் அரசியல்வாதிகளாக மாறி, நாட்டைக் குட்டிச்சுவராக்கும் அவலம் தொடர்கின்றது.

'வாழு! வாழவிடு!!' - இதுதான் அமைதியான - சமாதானமான - வாழ்க்கை முறைக்கு அடிப்படையான தத்துவம். இந்தத் தாற்பரியத்தை நமது மக்களுக்கு மதங்கள் போதிக்குமானால் நாட்டைப் பீடித்திருக்கும் தோஷம் பெரிதும் நீங்கிவிடும்.

ஆனால் இதை விடுத்து கை நீட்டி வாழத்தூண்டியும், கைகட்டி வாழ அனுமதித்தும் மதத் தலைவர்கள் நடந்துகொள்வது அவர்களது சமூகப் பொறுப்பிலிருந்து பிறழும் நடவடிக்கையாகும்.

ஆன்மிக அடி அத்திவாரத்தில் முகிழ்ந்த இந்திய நாட்டின் ஆத்ம சக்தியாக வைதிகநெறி திகழ்கின்றது. அந்த நாட்டின் பேரொளியாக உதித்த சுவாமி விவேகானந்தர் போன்ற வீரத் துறவிகள் காட்டிய நெறி நமது மதத் தலைவர்களுக்கு வழிகாட்டுவதாக!

வீரத்துறவி விவேகானந்தரின் ஜயந்தியை ஒட்டி ஆத்மீக எழுச்சி வாரம் அனுஷ்டிக்கப்படும் இக்கால கட்டத்தில் நமது மதத் தலைவர்கள் இதைக் கவனத்தில் கொள்வது நல்லது.

அனைத்து மக்களையும் 'சகோதர, சகோதரிகள்' என்று சிக்காக்கோ மாநாட்டில் விவேகானந்தர் விளித்தது போன்று, சர்வதேசரீதியில் - உலகளாவிய வகையில் - சகோதரத்துவத்தைப் பரப்பும் பணியை நமது மதங்கள் ஆரம்பிக்கட்டும். அமைதி தானே பிறக்கும்.

# பிரபாவுக்கு ஹக்கீம் கடிதம்

கொழும்பு,ஜன.15

தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான பிரச்சினைகள் குறித்து பேசித் தீர்க்கவிரும்புவதாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒரே மொழியைப் பேசுகின்ற இரு இனங்களுக்கிடையிலான பிரச்சினையைப் பேசித் தீர்ப்பதற்கு நான் விரும்புகின்றேன்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இவ்வேளையில், ஒரே மொழியைப் பேசும் தமிழ் மற்றும் முஸ்லிம் இனங்களுக்கு இடையிலான பிரச்சினைகள அதிகரித்துச்செல்கின்றன. இதுதொடர்பாக உங்களைச் சந்தித்து நேரில் பேசவிரும்புகின்றேன்.

கிழக்கில் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளின் பதற்ற நிலையை தணிப்பதற்கு நீங்கள் எமக்கு உதவவேண்டும். அத்துடன் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களை பாதுகாப்பு உத்தரவாதத்துடன் மீளக் குடியேற்றுவதற்குரிய அழைப்பைத் தாங்கள் விடுக்கவேண்டும்.

கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளில் விவசாயம் செய்வதற்கு அவர்களை அனுமதிக்க வேண்டும் - இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

### பயிற்சிநெறிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.15

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் முதலாம் தவணைக்குரிய பயிற்சிநெறிகள் ஆரம்பமாகவுள்ள திகதிகள் பற்றிய விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் வருட பகல்நேர மாணவர்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமையும் - மூன்றாம், நான்காம் வருட பகல்நேர மாணவர்களுக்கும் இரண்டாம், மூன்றாம், நான்காம் வருட பகுதிநேர மாணவர்களுக்கும் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமையும் -

பயிற்சிநெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

மாணவர்கள் அனைவரையும் மேற்குறிப்பிட்ட திகதிகளில் பயிற்சிநெறிகளில் கலந்துகொள்ளுமாறு நிறுவனத்தின் இயக்குநர் ரி.இராஜரட்னம் அறிவித்துள்ளார். (ஐ-10)

## நாட்டு நடப்பு

### நாய்க்கும் நன்றி உண்டோ?

நாயொன்று நாயைக் காணில்
நடுத்தெரு தாண்டி ஓடி
போயதன் மீது வீழ்ந்து
புழுதியில் உருட்டிப் பின்னே
வாயாலே ஓலமிட்டுக் கத்த
வந்திடும் பல நாய் ஒன்றாய்
நாயைப்போல் சிலபேர் இன்று
நடுத்தெருவில் புரளக் காண்பீர்
போயிந்த நாயார் தன்னை
புகழுகின்றார் புலவர் எல்லாம்
நாயேன் என்று மணிவாசகனார்
நவின்றதை எண்ணிப் பாரும்
வாயார அவரை வாழ்த்தி
வணங்குதல் முறைமை அன்றோ?

- *விகடகவி.*

### கருத்தூட்டல் நிகழ்வு

முல்லைத்தீவு மாவட்டம் உடையார்கட்டு வலயப் பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தினரின் கருத்தூட்டல் நிகழ்வு கடந்த 10ஆம் திகதி மாலை 3 மணியளவில் உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் திருமதி கதிர்காமநாதன் தலைமையில் ஆரம்பமானது.

பொதுச் சுடரினை அரசியல் துறையைச் சேர்ந்த தமிழ்க்கவி ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ பெண்கள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் சகிலா ஏற்றிவைத்தார். தொடர்ந்து 2ஆம் லெப்ரினன்ட் மாலதியின் திருவுருவப் படத்திற்கு ஆசிரியை சியாமினி மலர்மாலை அணிவித்தார். இந்நிகழ்வில் கருத்துரைகளை தமிழீழ பெண்கள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் சகிலா, விஸ்வமடுப் பிரதேச அரசியற்றுறைப் பொறுப்பாளர் ஆதித்தவர்மன், அரசியற்றுறையைச் சேர்ந்த தமிழ்க்கவி மற்றும் ஆசிரியை சியாமினி ஆகியோர் நிகழ்த்தினர். (ஐ-8)

# பொதுமக்களின் நிர்வாக விடயங்களில் படையினரின் தலையீட்டை அனுமதியாதீர்!

## அரச அதிகாரிகளுக்கு மகேஸ்வரன் ஆலோசனை

யாழ்ப்பாணம்,ஜன.15

யாழ்.மாவட்டத்தில் முழுமையாக சிவில் நிர்வாகம் நடக்கின்றது. எனவே நிர்வாக விடயங்களில் இராணுவத்தினர் தலையிடுவதை அரச அதிகாரிகள் அனுமதிக்கக் கூடாது.

- இப்படிக் கூறியுள்ளார் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன்.

யாழ்.செயலகத்தில் ஞாயிறன்று நடந்த மாநாட்டில் பேசுகையில் அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் அபிருத்தி, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அக்கறையாக இருக்கின்றார். பதவியேற்று ஒருமாத காலத்துக்குள் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவையும் அவரது அமைச்சு அதிகாரிகளையும் இங்கு அனுப்பியுள்ளார்.

அமைச்சரவையில் உள்ள 52 அமைச்சர்களும் 7 பிரதி அமைச்சர்களும் இங்கு விஜயம் செய்வார்கள். அவர்கள் தமது துறைகள் சார்ந்த பணிகளை, திட்டங்களை முன்னெடுப்பர்.

இந்த அமைச்சர்கள் மேற்கொள்ளும் பணிகளை மேற்பார்வை செய்யப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இங்கு வருவார். அதற்கு முன்பாக அவரின் அந்தரங்கச் செயலாளரை இங்கு அனுப்பியுள்ளார். இங்குள்ள நிலைமைகளை அவர் பிரதமருக்கு எடுத்துக்கூறுவார்.

அரசியல் பழிவாங்கல், ஊழல்கள் நிறைந்ததாக இருந்த யாழ். நிர்வாகம் தற்சமயம் அரசியல் தலையீடு இன்றிச் சுதந்திரமாகச் செயற்பட வழி ஏற்படுத்தியுள்ளோம். அரசியல் பழிவாங்கல்கள் இங்கு இடம்பெறமாட்டாது.

மக்களின் தேவையை உணர்ந்து, சுதந்திரமான முடிவுகளை எடுக்கக் கூடிய வாய்ப்பு இங்குள்ள அரச, கூட்டுத்தாபன அதிகாரிகளுக்குக் கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மக்களின் பிரச்சினைகளுக்கு உடன் தீர்வைக்காண அதிகாரிகள் முன்வரவேண்டும்.

தங்களால் தீர்க்கமுடியாத பிரச்சினைகள் குறித்து எம்மிடம் தெரிவித்தால் அதற்கான தீர்வைப் பெற்றுத்தருவோம்.

யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவான தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்த போதும், அவர்கள் தெரிவிக்கும் கருத்துக்களையும் அரச அதிகாரிகள் ஏற்று மதிப்புக்கொடுக்க வேண்டும்.

கடந்த 7 வருடங்களில் குடாநாட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உருப்படியான நஷ்டஈடுகள் வழங்கப்படவில்லை. இதற்குக் காரணம் அரச அதிகாரிகள்தான். பொதுமக்கள் சமர்ப்பித்த நஷ்டஈடுகளுக்கான விண்ணப்பங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் அரச அதிகாரிகள் மக்களுக்குரிய கொடுப்பனவுகளை உடனுக்குடன் வழங்கி, அவர்கள் வாழ்க்கை சிறப்புற உதவ வேண்டும்.

தெற்கில் நடக்கும் சிவில் நிர்வாகம் போன்ற சிவில் நிர்வாகமே இங்கு நடக்கின்றது. அங்குள்ள மக்களுக்குக் கிடைக்கும் கொடுப்பனவுகள், சலுகைகள் எமது மக்களுக்கும் கிடைக்கக் கூடியதாக அரச அதிகாரிகள் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

எந்த விடயத்திலும் இராணுவத்தினரின் தலையீட்டை அரச அதிகாரிகள் அனுமதிக்கக்கூடாது.

இங்குள்ள மக்களின் பணத்தை வரியாகவோ, வேறு எந்தவிதமாகவோ அறவிட்டுத் தெற்கே அனுப்ப அரச அதிகாரிகள் முயலக்கூடாது. இங்கு கிடைக்கும் வருமானத்தை எமது மக்களின் முன்னேற்றத்துக்குச் செலவிடவேண்டும்.

தென்மராட்சியில் மக்களை மீளக் குடியமர்த்த அவசரப்படக்கூடாது. சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றத்தில்தான் மக்களை மீளக் குடியமர்த்தும் விடயம் தங்கியுள்ளது. இந்த விடயத்தில் அரச அதிகாரிகள் அவதானமாகச் செயற்பட வேண்டும் - என்றார். (ஐ-3)

### உதயவாக்கு

தான் கூறும் பொய்களை ஒருவன் தானே நம்பத் தொடங்குவது அவனது பேரழிவின் ஆரம்பமாக இருக்கும்.

### நாளை

தை 3
புதன்கிழமை
(16-01-2002)
திதி : திருதியை
நள்ளிரவு 12.42 வரை.
நட்சத்திரம்: அவிட்டம்
முன்னிரவு 8.06 வரை.
கரிநாள்
சுபநேரம் : 5.04 - 6.34
ராகுகாலம் : 12.34 - 2.04
(பழைய நேரப்படி)

## எது வழிபாடு?



மீண்டும் சொல்கிறேன், மனத் தூய்மையுடன் இருங்கள், உங்களை நாடிவரும் ஏழைகளுக்கு உங்களால் இயன்ற உதவி செய்யுங்கள். இது நற்கருமம். இதன் பலனாக உங்கள் இதயம் தூய்மை (சித்த சுத்தி) பெறும். எல்லோரிலும் உறைகின்ற சிவபெருமான் வெளிப்பட்டுத் தோன்றுவார். அவர் எல்லோரது இதயத்திலும் எப்போதும் இருக்கிறார். அழுக்கும், தூசியும் படிந்த கண்ணாடியில் நம் உருவத்தைப் பார்க்க முடியாது. அறியாமையும், தீயகுணங்களுமே நம் இதயக் கண்ணாடியில் படிந்துள்ள தூசியும் அழுக்கும்.

நம் நன்மையை மட்டுமே நினைக்கின்ற சுயநலம், பாவங்கள் அனைத்திலும் முதற்பாவமாகும். 'நானே முதலில் உண்பேன், மற்றவர்களைவிட எனக்கு அதிகமான பணம் வேண்டும், எல்லாம் எனக்கே வேண்டும்', 'மற்றவர்களுக்கு முன்னால் நான் சொர்க்கத்தை அடைய வேண்டும், எல்லோருக்கும் முன்னால் நான் முத்தி பெறவேண்டும்' என்றெல்லாம் நினைப்பவன் சுயநலவாதி. சுயநலமற்றவனோ, 'நான் கடைசியில் இருக்கிறேன். சொர்க்கம் செல்வத்தைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நான் நரகத்திற்கு செல்வதால் என் சகோதரர்களுக்கு உதவ முடியுமானால் அதற்கும் தயாராக இருக்கிறேன்' என்கிறான். சுயநலம் இல்லாதவனே மேலான ஆன்மீகவாதி, அவனே சிவபெருமானுக்கு அருகில் இருக்கிறான். அவன் படித்தவனாக இருந்தாலும், படிக்காதவனாக இருந்தாலும் அவன் அறிந்தாலும், அறியவில்லை என்றாலும் அவனே மற்ற அனைவரையும்விட சிவபெருமானுக்கு அருகில் இருக்கிறான். சுயநலம் கொண்டவன் எல்லாக் கோயில்களை வழிபட்டிருந்தாலும், புண்ணிய தலங்கள் அனைத்தையும் பார்த்திருந்தாலும், சிறுத்தையைப்போல் தன் உடம்பு முழுவதிலும் மதச் சின்னங்களைத் தீட்டிக்கொண்டிருந்தாலும் அவன் சிவபெருமானிடமிருந்து விலகியே இருக்கிறான்.

- *சுவாமி விவேகானந்தர்*

# இம்மாத நிவாரணத்தை உடனடியாக வழங்குமாறு அமைச்சர் ஜயலத் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.15

குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கான இம்மாத நிவாரணத்தை உடன்வழங்க ஏற்பாடு செய்யும்படி புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா யாழ்.அரச அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்.செயலகத்தில் ஞாயிறன்று நடந்த மாநாட்டில் வைத்தே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

குடாநாட்டில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு மாதாமாதம் வழங்கப்பட்டுவரும் நிவாரணம் இம்மாதம் வழங்கப்படவில்லை. புதிய அரசு பதவியேற்ற பின்னர் இந்த நிவாரணம் நிறுத்தப்பட்டுவிட்டதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. நிவாரணம் தொடர்ந்து வழங்கப்படுமா இல்லையா, என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்று தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி அமைச்சரிடம் கோரினார்.

எக்காரணம் கொண்டும் நிவாரணத்தை நிறுத்த முடிவுசெய்யப்படவில்லை. பொருள்களை இங்கு எடுத்துவருவதில் ஏற்பட்ட தாமதத்தினாலேயே நிவாரணம் வழங்கப்படவில்லை. உடனடியாக நிவாரணத்தை வழங்குவதற்கான நடவடிக்கையை அரச அதிபர் எடுப்பார் - என்று அமைச்சர் ஜயலத் தெரிவித்தார். (ஐ-3)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வணிகக் கல்வியும் கணக்கீடும்

தரம் 11 இற்குரிய புதிய பாடத் திட்டத்துக்க அமைவான வணிகக் கல்வியும் கணக்கீடும் நூல் விற்ப னையாகின்றது. ஆசிரியர்: இ.இரகு நாதன் B.B.A.Dip. in Ed. (97020)

### விற்பனைக்கு

சைனா, இன்ஜினுடன் பூட்டப்பட்ட D.C டைனமோ விற்பனைக்கு உண்டு. வெல்டிங், பற்றறி சார்ஜ் என்பனவற் றிற்கு உகந்தது. தொடர்பு: வை.சிவ குமார், இல.461, நாவலர் வீதி, அத் தியடிச் சந்தி, யாழ்ப்பாணம். (97085)

### புறொயிலர் குஞ்சுகள்

பிறிமா இன புறொயிலர் குஞ்சு கள் விற்பனைக்கு உண்டு. விலை 40/=. மருந்து வகைகளும் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: வை. சிவகுமார், இல.461, நாவலர் வீதி, அத்தியடிச் சந்தி, யாழ்ப்பா ணம். (97086)

### தவறிவிட்டது

N.P.G.F. 6629, மோட்டார் சைக் கிள் இலக்கத்தகடு தாவடிக்கும் மல் லாகத்துக்கும் இடையில் தவறிவிட் டது. கண்டெடுத்தவர்கள் கரன் புத் தகசாலை, சுன்னாகம் எனும் முகவரி யில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(97078)

### தொலைபேசி இணைப்பு ஒன்று தேவை

*அனுகவேண்டிய முகவரி:*

ப.தாசன்,
புதுரோட்,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

**T.P.No.:3175** (97089)

### திருத்தம்

நேற்றைய 14-01-2002 உதயனின் 10ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய திருமதி சபாரத்தினம் மகேஸ்வரி யின கண்ணீர் அஞ்சலியில் வைத் திய உத்தியோகத்தரின் அன்புத் தாயார் திருமதி விஜயலட்சுமி ஞான லிங்கத்தின் பெயர் விடுபட்டுள்ளது. அதைச் சேர்த்து வாசிக்கவும்.

(97072)

### ஆங்கில ஆசிரியர் நியமனம்

பருத்தித்துறை,ஜன15

வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் நியமனம் செய் யப்படவுள்ளனர்.

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் மூன்று பாடத்தில் சித்தியும், ஜி.சீ.ஈ. சாதாரண வகுப்பில் கணிதம், தமிழ் உட்பட மூன்று திறமைச்சித்திகளுடன் ஆறு பாடச்சித்தியும் ஆங்கில பாடத்தில் விசேட சித்தியும் பெற்றவர்கள் இந்த ஆள்சேர்ப்புக்கு விண்ணப்பிக்கமுடி யும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன் வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப் படவேண்டுமென அறிவிக்கப்பட்டுள் ளது.

இவ்வாறு விண்ணப்பிப்பவர் களுக்கு எழுத்துப் பரீட்சையும் அத னைத் தொடர்ந்து நேர்முகப்பரீட்சை யும் நடத்தப்படும் என வலயக்கல்விப பணிப்பாளர் சி. சிவராஜா அறிவித்துள ளார்.

(7-118)

### ஓய்வூதிய தினங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.15

இந்த ஆண்டுக்கான ஓய்வூதியம் வழங்கப்படவுள்ள தினங்கள் அறி விக்கப்பட்டுள்ளன.

ஓயவூதியம் வழங்கும் திகதிகள் வருமாறு:

பெப்ரவரி 12ஆம் திகதி, மார்ச்- 7ஆம் திகதி, ஏப்ரல் - 4ஆம் திகதி, மே - 9ஆம் திகதி, ஜூன்- 11 ஆம் திகதி, ஜூலை 11ஆம் திகதி, ஓகஸ்ட் - 8ஆம் திகதி, செப்ரெம்பர் - 12ஆம் திகதி, ஒக்ரோபர் - 3ஆம் திகதி, நவம்பர்- 12ஆம் திகதி, டிசெம்பர் - 12ஆம் திகதி. (-3-10)

# பாப்பரசரின் பிரதிநிதி வியாழன் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம்,ஜன.15

பரிசுத்த பாப்பரசர் 2ஆம் அரு ளப்பர் சின்னப்பரின் இலங்கைக்கான பிரதிநிதி தோமஸ் ஜேச் சீங்-நான் நாளை மறுதினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வரும் இவர் எதிர்வரும் 18ஆம் திகதி காலை 9மணிக்கு யாழ். பத்திரிசி யார் கல்லூரியில் நடைபெறும் பரி சளிப்பு விழாவில் கலந்துகொள் வார். பின்னர் மாலை 4 மணிக்கு புனித சவேரியார் குருமடத்தில் குரு மட மாணவர்களுடனும் குருக்களுட னும் இணைந்து திருப்பலி ஒப்புக் கொடுப்பார். மறுநாள் காலை யாழ். மறைமாவட்டத்தில் உள்ள பல துறவற மடங்களுக்கு விஜயம் செய் வார். அன்று காலை 10.15 மணிக்கு மறைந்த ஆயர் எமிலியானுஸ்பிள் ளையின் நினைவாக இளைப்பாறிய குருக்களுக்கென புதிதாக அமைக் கப்பட்டுள்ள ஞாபகார்த்த இல்லத் தைத் திறந்துவைப்பார். பின்னர் 10.45 மணிக்கு புனித மடுத்தீனார் குருமடத்தில் இளைப்பாறிய ஆயா வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையின் குருத்துவ 60ஆவது ஆண்டு நிறை வுத் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்.

அன்று மாலை பருத்தித்துறை மறைக்கோட்டத்திற்கு விஜயம்செய்து தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து அங்கு வசிக்கும் அகதிகளை சந்தித்து உரையாடுவார்.

20ஆம் திகதி காலை யாழ். மறைமாவட்டத்தில் உள்ள இளைப் பாறிய குருக்களையும் பின்னர் மறை மாவட்ட அனைத்துக் குருக்களையும் சந்திப்பார். மாலை 4.30 மணிக்கு யாழ்.புனித மரியன்னை பேராலயத் தில் திருப்பலியும் அவருக்கான பொது வரவேற்பும் அளிக்கப்படும்.(-8)

## சைக்கிளோட்டம்

ஊர்காவற்றுறை பிரதேச செயல கத்தினால் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் சைக்கி ளோட்டப் போட்டி இன்று செவ் வாய்க்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறைச் சந்தியிலிருந்து ஆரம்பமாகவுள்ள இந்தப் போட்டியை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தொடக்கி வைக்கவுள்ளார். (-73)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பனை அபிவிருத்திச் சபையின்
புதிய தலைவராகப் பதவியேற்றிருக்கும்
**திரு.பொன்னையா சிவபாதம்**
அவர்களை வரவேற்று
அவர்தம் பணி விரிவுபட
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ந.சிறிலிங்கம்,
ஸ்ரீசாயி தொலைத்தொடர்பகம்,
சாத்தாவத்தை, மானிப்பாய்.

(97095)

*சமூகவியல் சமூகம் - யாழ்.பல்கலைக்கழகம்*
*புத்தாண்டின் தொடக்கச் சமூகப்பணி*

## முச்சக்கரவண்டி வழங்கும் வைபவம்

காலம் :- 15.01.2002 செவ்வாய் பி.ப. 3 மணி.
இடம் :- பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடம்.
தலைமை :- செல்வி ச.காயத்திரி, தலைவர் சமூகவியல் சமூகம்

*நிகழ்வுகள்*

☆ பாரதியின் வேண்டுதல்
☆ வாழ்த்துரைகள்,
கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர்
பெருந்தலைவர் கலாநிதி என்.சண்முகலிங்கன்
☆ சமூகப்பணி தொடக்கவுரை
*சமூகவியலின் பன்முகப் பரிமாணங்கள்*
வழங்குபவர்:- துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை
☆ முச்சக்கரவண்டி வழங்குதல்:-
ஏற்பாட்டாளர்:-ஆர்.பஞ்சாட்சரசர்மா (தலைவர், சமூகவியல் சமூகம், 2001)
பெறுநர் :-திருமதி தம்பையா செல்லம்மா, நல்லூர்.
☆ நிறைவுரை:- திரு.அ.எ.ரிச்சேட் (பெரும் பொருளாளர், சமூகவியல் சமூகம்)
☆ எங்கள் அன்புப் பணிக்காய் உங்களின் இந்தப் பொழுதைத் தந்திடுங்கள்

உங்களை அன்புடன் அழைக்கும்

கு.யசோதா, ர.சுஜித்தா
இணைச்செயலர்

அரசறிவியல், சமூகவியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

*விளம்பர அனுசரணை:-*
வே.நடேசபிள்ளை, பபு தொலைத்தொடர்பு நிலையம்,
வளாக வீதி, திருநெல்வேலி. (97094)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
25
-
04
-
1920

மறைவு
17
-
12
-
2001

அமரர்
### சின்னையா தாமோதரம்பிள்ளை
(முன்னாள் சாரதி, இ.போ.ச., பருத்தித்துறை)

*எமக்கு உற்ற துணையாக இருந்து கல்வியூட்டி*
*நல்வாழ்வு தந்த எமது அன்புத் தெய்வமே!*
*உங்களை மீட்கப்பாடுபட்டோம்.*
*காலன் கவர்ந்து கொண்டான்.*
*ஆ! என்ன செய்வது,*
*மாதம் ஒன்று சென்றாலும்*
*உங்கள் நினைவு எம்மைவிட்டு என்றும் அகலாது.*

உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றும் இறைவனை வேண்டி நிற்போம்.

*த.மகாதேவன்,*
*ஆண்டிச் செட்டியா வளவு,*
*வல்வெட்டி.* (C/20299)

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
02
♦
08
♦
1995



உதிர்வு
15
♦
12
♦
2001

### செல்வி கோபாலகிருஷ்ணன் சகானா
*(மாணவி, யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தி.)*

***பூவே,***
***உன் புன்னகை மறைந்து போனது எங்கே?***
***தென்றலை நாங்கள் தேடுகின்றோம்.***
***தேடியே பதில்தர வாராயோ?***
***அன்பே நீ மறைந்து போனாலும் நாம் உன்னை மறப்போமா?***

உன் பிரிவால் வாடும்:
சி.கோபாலகிருஷ்ணன் (தந்தை)
கோ.சிவரஞ்சனி (தாய்),
தம்பையா [illegible] ஜகநாயகி (பெரியப்பா, அம்மாச்சி),
சின்னத்து[illegible] [illegible]லகவதி (பேரன், பேர்த்தி)
வைரமுத்[illegible] [illegible]மணி (பேரன், பேர்த்தி)

*பொன்மணி நிலையம்,*
*அல்வாய் வடக்கு.*

(97081)

தகவல்: **சி.கோபாலகிருஷ்ணன் (தந்தை)**

# மரண அறிவித்தல்கள்

### A.S.பொன்னையா (சில்லாலை)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஏ.எஸ்.பொன்னையா நேற்றுமுன்தினம் 13.01.2002 ஞாயிற்றுக் கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நிக்கிலஸ்பிள்ளை அந்தோனிப்பிள்ளை - விக்ரோறியா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அம்மா ரத்தினத்தின் அன்புக் கணவரும் மற்றும் அருங்குமார், ராஜாஜி, செல்வாஜி ஆகியோரின் பாசமிகு தந்தையும், முத்தம்மா (நானாட்டான்), யேசுதாசன் (கனடா), காலஞ்சென்றவர்களான மேஜர் என்.ஏ.இம்மானுவேல், செல்லத் துரை, இக்னேசியஸ், ராஜதுரை, திரேசம்மா, மரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று (14.01.2002) திங்கட்கிழமை மலே சியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ராணி அரியநாயகம் (பெறாமகள்)
*(பிரதேச முகாமையாளர், யாழ். காப்புறுதிக் கூட்டுத்தாபனம்)*

*54/3, சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை,*
*பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.* (97084)

### திருமதி நாகேந்திரம் அன்னமுத்து

ஏழாலை தெற்கு, மயிலங்காட்டைச் சேர்ந்த திருமதி நாகேந்திரம் அன்னமுத்து அவர்கள் 13.01.2002 ஞாயிறு இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேந்திரம் (கணக்காளர்) அவர்களின் அன்பு மனைவியும் மற்றும் சகுந்தலாதேவி (ஏழாலை), சறோஜினிதேவி (தெல்லிப்பழை), சாரதாதேவி (மட்டுவில்) ஆகியோரின் அன்புத் தாயா ரும் காலஞ்சென்ற கோபாலபிள்ளை (லிகிதர்) மற்றும் குருதேவ் (மின் னியல் பொறுப்பு ஊழியர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்), ஸ்ரீவாமதேவன் (சங்கீத ஆசிரியர், மட்டுவில்) ஆகியோரின் மாமியாரும் சசிகரன் (சுவிஸ்), சுதாகரன் (பிரான்ஸ்), ரூபாகரன், செந்தூரன், பிரபாலினி, வாமினி ஆகி யோரின் அருமைப் பேர்த்தியாரும் பிருத்தியா, கார்த்திக் (சுவிஸ்) ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் (கல்வி அதிகாரி, சிங்கப்பூர்), காலஞ்சென்ற செல்லத்துரை, காலஞ்சென்ற பண்டிதர் பொன் னுத்துரை (இளைப்பாறிய அதிபர், மட்டுவில்) மற்றும் அப்புத்துரை (இளைப்பாறிய தபால் உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு சகோதரி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.01.2002) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு ஏழாலை தெற்கு, சுன்னாகம், மயிலங்காட்டு இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*முகவரி:*
பொ.குருதேவ் *(சிமெந்துக் கூட்டுத்தாபனம்)*
*வீமன்காமம், தெல்லிப்பழை.*
பொன்.ஸ்ரீவாமதேவன்
*மட்டுவில் தெற்கு (ஆசிரியர் யூனியன் கல்லூரி)*
*(சங்கீதம்).*

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளை.

(97087)

### சபாபதி சிவநேசன் (சிவநேசன் அண்ணை)

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாக வும் கொண்ட சபாபதி சிவநேசன் 11.01.2002 வெள்ளிக்கிழமை கிளி நொச்சியில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சபாபதி - பாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் கண்மணியின் அன்புக் கணவரும் சத்தியலட்சுமி, சாந்த லட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் சபா.நாராய ணன் (ஓய்வுபெற்ற கிராமசேவையாளர்) மங்கையர்க்கரசி (கிளிநொச்சி) காலஞ்சென்ற சிவசம்பு மற்றும் பேரின்பநாயகம் (லண்டன்), பாலச்சந் திரன் (லண்டன்), பாக்கியநாதன் (கிளிநொச்சி), நாகேஸ்வரி (பொறுப் பதிகாரி, பண்டத்தரிப்பு பட்டணம்), சிவபாதம் (தேனீர்க்கடை, சங் கானை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வரட்ணம் (கிளி நொச்சி), பத்மாவதி (விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர், வலி.மேற்கு பண்டத்தரிப்பு), பகீரதி (லண்டன்), ராஜி (லண்டன்), செல்வமலர் (கிளிநொச்சி), தெய்வேந்திரம், சண்முகராசா (தேனீர்க்கடை, சங்கானை) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.01.2002 சனிக்கிழமை கிளி நொச்சியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சபாபதி நாராயணன்
(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்)

*பிள்ளையார் வீதி,*
*வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.*

(97093)

# ஆபத்தான வெடிப்பொருள்கள் பற்றி வன்னி மக்களுக்கு புலிகள் அறிவுறுத்து

வவுனியா,ஜன.15

அரச படைகளினால் வெடிக்கக் கூடிய நிலையில் விட்டுச்செல்லப்பட்டுள்ள மிதிவெடிகள் மற்றும் வெடிப்பொருள்கள் பற்றி விழிப்புணர்வுடன் நடந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள அவசர செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மிதிவெடிகள் உள்ள பகுதிகளென அபாய நாடாக்களால் அடையாளம் இடப்பட்டுள்ள பிரதேசங்களில் குடியேறியுள்ளோர் அவ்விடங்களில் இருந்து சிறிது காலத்திற்காவது தற்காலிகமாக விலகியிருக்கவேண்டும். வெடிப்பொருள்களைக் காண நேரிட்டாலோ அல்லது இருப்பதாக சந்தேகித்தாலோ கண்ணிவெடி அகற்றும் பிரிவின் தலைமையலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும். அவசர மீட்பு அணி அவ்விடத்திற்குச் சென்று ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். கண்ணிவெடி அகற்றும் பிரிவு உறுப்பினர் தவிர்ந்த எவரும் கண்ணிவெடி அகற்றும் அபாயகரமான பணியில் ஈடுபடவேண்டாம். அவ்வாறு ஈடுபடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். உங்கள் குடியிருப்புகளை அண்டியோ அன்றி வேறு இடங்களிலோ அநாமதேயமாகக் காணப்படும் பொருள்களை அண்டிச் செல்வதையோ அல்லது தொட முற்படுவதையோ முற்றாகத் தடுக்க வேண்டும். அழகான சில வெடிப்பொருள்களை உங்கள் குழந்தைகள் காணக்கூடும். இவற்றைப் பற்றி அவர்கள் நன்கு புரியும்வண்ணம் அறிவுறுத்தவும்.

இவ்வெடிபொருள்கள் தமிழீழ மக்களைப் பலியெடுப்பதை நாம் அனுமதிக்கப்போவதில்லை. மக்களுக்காக எங்களது உயிர்களையும் அங்கங்களையும் அர்ப்பணித்தாவது இப்பணியைத் தொடரவுள்ளோம். இதற்கு மக்களின் உளப்பூர்வமான ஒத்துழைப்பை நாடி நிற்கின்றோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-8)

## கேணிக்குள் வீழ்ந்து சிறுவன் பலி

குருநகர் பகுதியில் உள்ள கேணி ஒன்றில் நேற்று தூண்டில் போட்டு மீன்பிடிக்க முற்பட்ட 7 வயதுச் சிறுவன் ஒருவன் கேணிக்குள் தவறிவிழுந்து உயிரிழந்தான். குருநகர் இரண்டாம குறுக்குத்தெருவைச் சேர்ந்த சந்திரசேகரம் சுகன்ஜன் (சுமில்ரன்) என்ற சிறுவனே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்தான்.

நேற்றுக்காலை 11 மணியளவில தூண்டிலுடன் வீட்டில் இருந்து புறப்பட்ட சிறுவன் பிற்பகல் 1 மணி வரை வீடு திரும்பாததைத் தொடர்ந்து பெற்றோர் சிறுவனைத் தேடித் திரிந்ததாகவும் -

இறுதியில் பிற்பகல் 5 மணியளவில் கேணிக்குள் இறங்கித் தேடிய போது அங்கு பாசிக்குள் சிக்கிய நிலையில் சிறுவனின் சடலம் மீட்கப்பட்டதாகவும் : உறவினர்கள் தெரிவித்தனர்.

சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ் கடமைபுரியும் ஆசிரியர்கள் உள்ளீர்ப்பு

பருத்தித்துறை,ஜன.15

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் சகல ஆசிரியர்களையும் இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்பதற்கான அரசாங்க சேவை ஆணைக் குழுவினதும் கல்விச் சேவைக் குழுவினதும் 2001/12ஆம் இலக்க சுற்றறிக்கை சகல வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டில் தொண்டர் ஆசிரியராக இருந்து பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களைத் தவிர, ஏனைய போட்டிப் பரீட்சைகள் மூலம் தெரிவான ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3 தரம் IIக்கு உள்வாங்கப்படவுள்ளனர்.

1994.10.06ஆம் திகதியின் பின்பு பயிலுநர் அல்லது தகுதிகாண் அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள்2001.11.15ஆம் திகதியில் அல்லது அதற்கு முன்பு ஒரு திகதியில் பட்டச் சான்றிதழ் செல்லுபடியாகும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருப்பார்களாயின் அவர்களுக்கு 2001.11.15ஆம் திகதி முதல் பட்டதாரி ஆசிரியராக இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3தரம் Iஇற்கு நியமனக் கடிதம் வழங்கப்படவுள்ளது.

பயிலுநர் அல்லது தகுதிகாண் ஆசிரியர்கள் சேவையில் உள்ள போது பல்கலைக்கழகம் ஒன்றில் உள்வாரியாகப் பட்டம் பெற்றிருப்பின் பல்கலைக்கழகத்தில் இருந்து பெற்றுக்கொண்ட மகாபொல புலமைப் பரிசில் மற்றும் ஏனைய அரச உதவு தொகை என்பவற்றை அவ்வப் பல்கலைக்கழகத்தில் மொத்தமாகச் செலுத்திய பற்றுச்சீட்டினை தத்தம் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பித்த பின்னரேயே அவர்கள் உள்வாங்கப்படுவார்கள்.

அத்துடன் பாடசாலை ஒன்றில் ஆசிரியராகக் கடமையாற்றிய அதே காலப் பகுதியில் பல்கலைக்கழகம் ஒன்றில் உள்வாரி மாணவராக எவ்வாறு கற்கை நெறியை மேற்கொண்டார். என்பதற்கான விளக்கக் கடிதத்தையும் பெற்று மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பவேண்டும்.

எதிர்வரும் காலங்களில் அங்கீகரிக்கப்பட்ட விடுப்பு (லீவு) இன்றி பல்கலைக்கழகம் அல்லது யாதாயினும் உயர் கல்வி நிறுவனத்தில் உள்வாரி மாணவராகக் கற்கை நெறியை மேற்கொள்ளமாட்டேன் என ஆசிரியரினால் உறுதிமொழிக் கடிதமும் இணைக்கப்படுதல் வேண்டும்.

பயிலுநர் அல்லது தகுதிகாண் ஆசிரியராகக் கடமையாற்றிய அதே காலத்தில் விடுப்பு இன்றி பல்கலைக்கழகம் ஒன்றில் கற்கை நெறியை மேற்கொண்டமை தொடர்பாக ஆசிரியருக்கு வலயக் கல்விப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட எச்சரிக்கைக் கடிதத்தின் பிரதி இணைக்கப்படல்வேண்டும்.

1994.10.06ஆம் திகதியின் பின் நியமனம் பெற்ற பயிலுநர் அல்லது தகுதிகாண் ஆசிரியர்கள் அரச பயிற்சிக் கலாசாலையொன்றில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் பயிற்சியை முடித்திருப்பின் தகுதிகாண் காலத்தைக் கருத்திற்கொள்ளாது இலங்கை ஆசிரியர் சேவை 3-Iஇல் நியமனம் வழங்குவதற்கான விண்ணப்பத்தையும் உரிய முறையில் ஆசிரியரிடமிருந்து பெற்று வலயக் கல்விப் பணிப்பாளரின் விதப்புரையுடன் மாகாணக் கல்விப் பணிப்பாள

(08ஆம் பக்கம் பார்க்க)




**உயர்வினை பாராட்டுகின்றோம்**

சோதிடத்துறையில் 30 வருஷ காலம் ஈடுபாடு கொண்டு விளங்கிவரும் அறிவுப் புலத்தில் பல ஆக்கங்களைப் படைத்துவரும் மெலிஞ்சிமுனை றோ.க.த.க. வித்தியாலய பதில் அதிபர்

**திரு.V.A.சிவராசா**

B.A., B.Phil, Dip. in Ed. SLPS - 2.II

*நிரந்தர அதிபர் சேவையாளனாக உயர்வடைந்ததை உளமாரப் பாராட்டும்:*

**ரவி மோட்டோர்ஸ்,**

பழைய இல.245 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். புதிய இல.52

(97083)



*சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்*

**மனதார வாழ்த்துகின்றது**

தென்மராட்சி பிரதேச அழிவுகளை விசேடமாக எமது வணிக நிலைய அழிவுகளைப் பார்வையிட பல நெருக்கடிக்கும், இடைஞ்சல்களுக்கும் மத்தியில்



கௌரவ புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர்

**Dr.ஜயலத் ஜெயவர்த்தன**

அவர்களையும்



வன்னிப் பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ நூர்டின் மசூர்**

அவர்களையும்



ஏனைய குழுவினரையும் அழைத்துவந்து இழப்புக்களை காட்டிய இந்து கலாசார அமைச்சர்

**கௌரவ தி.மகேஸ்வரன்**

அவர்களையும்

இதயத் திருப்தியோடும் நன்றியோடும் வாழ்த்துகிறோம். மேலும் யாழ்.மாவட்ட மக்களின் வாழ்வு வளம்பெற அவர்கள் மேன்மேலும் சிறந்த சேவையாற்றவேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

கைத்தொழில் வணிகர் மன்றம்,
சாவகச்சேரி.

(97100)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி லீலாதேவி மனுநீதி

சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி லீலாதேவி மனுநீதி நேற்று (14.01.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனுநீதியின் (R.M.P.) அன்பு மனைவியும் புஸ்பராஜா (கனடா), திருமதி பவானி ஸ்ரீதரன் (ஆசிரியை யா/சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத்தாயாரும் சறோஜினி (கனடா), ஸ்ரீதரன் (முகாமைத்துவ உதவியாளர் யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும் ஜினித்தாவின் (கனடா) அன்புப் பேர்த்தியாரும் நாகராசா (ஓய்வுபெற்ற அதிபர்), புனிதவதி (அமெரிக்கா), திலகவதி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.01.2002) திங்கட்கிழமை திருவடிநிலை மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுழிபுரம் மேற்கு,*
*சுழிபுரம்.*

தகவல்:
ஸ்ரீதரன் (மருமகன்)

(97097)

### கணபதி பானுவதி

வயாவிளானைப் பிறப்பிடமாகவும் மடத்தடி வயாவிளானை வசிப்பிடமாகவும் தற்போது ஆறுகால்மடத்தடியில் வசித்து வந்தவருமாகிய கணபதி பானுவதி 10.01.2002 அன்று காலமானார்.

இன்று நடைபெற இருந்த அன்னாரின் இறுதிக்கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை (16.01.2002) புதன்கிழமை நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

*மயிலு வீதி,*
*ஆறுகால் மடம்.*

தகவல்:-
மீனாட்சிஅம்மா (மகள்)

(97098)

### பொ.சீனிவாசகம் குணரட்ணம்

**(தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி ஆகியவற்றில் கடமையாற்றி இளைப்பாறிய கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்)**

அச்சுவேலி தோப்பு, இராசவீதியைச் சேர்ந்த சீனிவாசகம் குணரட்ணம் நேற்று (14.01.2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் விஜயலட்சுமியின் அன்புக் கணவரும் திருமதி குணலட்சுமி இராசகுமார் (கொழும்பு), கு.அமுதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆவரங்கால் மேற்கு,*
*புத்தூர்.*

தகவல்:
கு.விஜயலட்சுமி (மனைவி)

(97102)


**பிற்போடப்பட்டுள்ளது**

ஆத்திசூடி வீதி.
அண்ணமார் ஈஸ்வர ஆலய
அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு
14.01. 2002 அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தினால் 14.03.2002 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.
- ஆலய பரிபாலனசபை.

(9710

**நாகம்ஸ்** சுன்னாகம்

மகத்தான பொங்கல் வெளியீடு
சரத்குமார், மீனா, பிரகாஷ்ராஜ் நடித்த
**ரிஷி**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.)

(97088)

**ராஜா** யாழ்ப்பாணம்

இன்று மட்டும்
வடிவேலு, விவேக், குஷ்பு மற்றும் பலர் நடித்த
**விரலுக்கேத்த வீக்கம்**
நாளை 16-02-2002 முதல்
கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்
தினசரி:- 10.30, 2, 5 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00

(C/20092)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

பிரசாந்த், ஷாலினி, வடிவேலு மற்றும் பலர் நடித்த
**பிரியாத வரம் வேண்டும்**
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)

(C-20231)

**லஷ்சுமி** இணுவில்

2001 ஆம் ஆண்டின் சிறந்த படத்திற்கான தேசிய விருதுபெற்ற படம்
மம்முட்டி, முரளி, ரம்பா, தேவயானி, அப்பாஸ் நடித்த
**ஆனந்தம்**
(ரீல்ஸ்)
தினசரி: 10.30, 2.30 (ப.நே.)

(97099)



தரம் நாடும் மக்களின் நிரந்தர பாவனைக்கு...

**V.S.S. LUNCH GINGELLY OIL**

**வி.எஸ்.எஸ். சாப்பாட்டு நல்லெண்ணெய்**

அன்றும் இன்றும் என்றும் தரமான நல்லெண்ணெய்த் தயாரிப்பில் பிரபல்யமாக விளங்குபவர்கள்

வ.ச.சுந்தரலிங்கம், சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

ஸ்ரீரங்கன் களஞ்சியம் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

V.S.S. T.P 2975 V.S.S.

(97103)

## கடும் மழை, வெள்ளம் காரணமாக

# முல்லைத்தீவு கல்வி வலயத்தில் இயங்கும் பாடசாலைகளுக்கு 15 லட்சம் ரூபா நஷ்டம்!

வவுனியா,ஜன.15

வன்னிப் பகுதியில் அண்மையில் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளுக்கு சுமார் பதினைந்து லட்சம் ரூபாவுக்கு மேல் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தற்காலிகமாக அமைக்கப்பட்ட வகுப்பறைக் கொட்டில்கள் அனைத்தும் முற்றாகச் சரிந்து வீழ்ந்து விட்டன. பாடசாலைகளின் வேலிகள் சேதமடைந்துள்ளன.

சில இடங்களில் மழை வெள்ளத்தில் அள்ளுண்டு தளபாடங்கள் அடித்துச்செல்லப்பட்டுள்ளன.

ஏற்கனவே தளபாடங்கள் பற்றாக்குறை காரணமாக நிலத்திலிருந்து கல்வி கற்ற மாணவர்கள் வகுப்பறைகளில் வெள்ளம் தேங்கியுள்ளதால் கல்வியைத் தொடரமுடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை -

தற்காலிகமாக அமைக்கப்பட்ட வகுப்பறைகளின் கொட்டகைகள் உரியகாலத்தில் வேயப்படவில்லை எனவும் கூறப்பட்டது.

மேற்படி சேதங்கள் குறித்து மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் முல்லைத்தீவு அரச அதிபருக்கும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. (-3-7)

## வவுனியாவில் நடமாடும் சேவை

கொழும்பு,ஜன.15

இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக வவுனியாவில் விசேட நடமாடும் சேவை ஒன்றை விரைவில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்தச் சேவையில் பொதுமக்கள் பங்குபற்றித் தமது பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வைப் பெறமுடியும் என்றும் வவுனியா செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். (6-ரி)

## 'லக்பிம' ஆசிரியர் காலமானார்

கொழும்பு, ஜன.15

பிரபல சிங்களத் தினசரியான 'லக்பிம' பத்திரிகையின் ஆசிரியர் கீர்த்திசிறி நிமால் சாந்த நேற்று மரணமானார். அவருக்கு 46 வயது.

நேற்று கடமைக்கு வந்த அவர் மதிய உணவுக்காக வெளியில் சென்று அலுவலகத்திற்குத் திரும்பும் வழியில் காலமானார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)


இனிமேல்

பொருளியற் கல்லூரி

A/L 2003 தேசிய வருமானம்



S.வரதராஜன் B.A (Hons)

ஆரம்பம் : 17 - 01 -02

பியாழன் 4.00 (ப.ப)

A \ L 2004 பொருளியல் கற்கும் மாணவர்கட்கு

பொருளியல் ஆசிரியர் S. வரதராஜன் B.A (Hons) அவர்களின் வகுப்புகள் பொருளியற் கல்லூரியில் மட்டும் நடைபெறும்

நிர்வாகி, பொருளியற் கல்லூரி.

CHEMISTRY CENTRE

83, பலாலி வீதி. கந்தர்மடம்.

A/L 2004

ஆரம்பம்:-

இன்று 4 p.m. (N.T.)

C.Maths - செந்தில்நாதன்

Phy. - கருணாநிதி

Che. - அன்பு

Bio. - தற்பரன்

"காந்தப்புலம்"

19-01-2002 - 5 p.m.

(97096)


# தீக்குச்சி மருந்தில் வெடி: இரு சிறுவர்கள் காயம்

யாழ்ப்பாணம்,ஜன.15

தைப்பொங்கல் தினமான நேற்று தீக்குச்சி மருந்தில் வெடி அடித்து விளையாடிய இருவர் கையில் காயமடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கொட்டடி, ஆஸ்பத்திரி வீதியைச சேர்ந்த மரியதாஸ் சிறீகிரன் (வயது - 15) என்ற சிறுவனும், கொக்குவில் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவன் ஒருவனுமே காயமடைந்தனர்.

இவர்கள் தீக்குச்சி மருந்தை பைப்புகளுக்குள் இறுக்கிக் குத்திய சமயம் பைப் வெடித்து சிதறியதாலேயே காயமடைந்ததாகத் தெரிவிக்கபபட்டது.

பொங்கல் திருநாளான நேற்று குடாநாட்டில் பரவலாக தீக்குச்சி மருந்தை பைப்புக்குள் அடைத்து வெடிஅடித்து சிறுவர்கள் மகிழ்ந்ததைக்காண முடிந்தது.

குடாநாட்டில் பட்டாசுகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகாரணமாகவே சிறுவர்கள் இந்தத் தீக்குச்சி மருந்து வெடியில் அதிக ஈடுபாடு காட்டினர்.(உ-6)

### ஹிரோசிமா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:-

தென்மராட்சிப் பிரதேசத்தைப் புனரமைக்க முன்னர் அங்கு புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள், மிதிவெடிகள் அகற்றப்படவேண்டும். அதற்கு மட்டும் 30கோடி ரூபா தேவை என அரச அதிபர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம், ஐ.நா. அபிவிருத்தி நிறுவனம் ஆகியவற்றுடன் இதுவிடயமாகப் பேச்சு நடத்தவிருக்கின்றோம். மிதிவெடி அகற்றப்பட்ட பின்னர் இப்பிரதேசம் புனரமைக்கப்படும் - என்றார்.

அமைச்சர்களின் விஜயத்தை நினைவுகூர்ந்து ஞாபகச் சின்னங்களை அவர்களுக்கு சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் கழகம் நேற்று வழங்கியது. (உ-3-173)

### தமிழர்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

வென்றெடுக்கவும் எமது மக்களை அணிதிரட்டி கடுமையான போராட்டங்களை நாம் நடத்தவேண்டி இருக்கும். எமது பாதை மிகவும் நீளமானது. எனவே நாம் எமது பணிகளை இன்றே - இப்பொழுதே - ஆரம்பிக்க வேண்டும் - என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ)

### வடக்கிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மல், அவற்றைக் கலைத்துவிட்டு, அவற்றுக்குப் பதிலாக அந்தச் சபைகளை நிர்வகிப்பதற்கு விசேட ஆணையாளர்களை நியமிக்கலாம் என்றும் - பிரதமர் ரணில் கருதுவதாக அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

### மாகாணக்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

தகுதிகாண் ஆசிரியர் அல்லது [illegible]லுநர் ஆசிரியர் ஒருவர் 1994.10.06 [illegible]குப் பின் நியமனம் பெற்று அங்கீ[illegible]ரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் 2001.11.15ஆம் திகதியில் அல்லது அதற்கு முன்னைய ஒரு திகதியில் பட்டச் சான்றிதழ் செல்லுபடியாகும் வகையில் பட்டம் பெற்றிருப்பின் அவ்வாறான ஆசிரியர்களை 2001.11.15 ஆம் திகதிமுதல் பட்டதாரி ஆசிரியராக இலங்கை ஆசிரியர் சேவை 3-Iஇல் நியமனம் செய்து நியமனக் கடிதம் வழங்குவதற்கு அந்தந்த ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பத்தைப் பெற்று உரிய முறைப்படி உரிய ஆவணங்களுடன் உடனடியாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

தகுதிகாண் ஆசிரியர்களில் இன்றுவரை நிரந்தர நியமனம் கிடைத்த கிடைக்காத (தொண்டர் ஆசிரியர்களைத் தவிர) சகல ஆசிரியர்களையும் உடனடியாகத் தத்தம் கல்வி வலய அலுவலகங்களில் உள்ள தாபனக்கிளையுடன் தொடர்புகொண்டு உரிய விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்து வலயக் கல்விப்பணிப்பாளரின் விதப்புரையுடன் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு கல்விப் பணிப்பாளர் சி.கமலநாதன் அறிவித்துள்ளார். (ஐ-7-118)


எமது புதிய வீடியோ CD வெளியீடு

✠ கண்ணுல காச காட்டப்பா

பிரமிட் CD

✠ கடல் பூக்கள்

புதிய படபோஸ்டர்கள் விற்பனைக்குண்டு.

அல்டி

எலக்ரோனிக்ஸ்

(C/20304) யாழ்ப்பாணம்.



Jaffna College Institute of Technology

Vaddukoddai, Jaffna, Sri Lanka.

STUDENTS ARE WELCOME

to register for the following courses

commencing from

Final week of January 2002

**Technican Diploma Courses (NDT) Level Courses**

✲ Electronics & Telecommunication Engineering

(Open University Exemption for this Course) Duration : 3 Years (full time)

**Technican Certificate Course (NDT Level Courses)**

✲ Basic Engineering

✲ Electronics

Duration : 1 Year (full time)

**Certificate Craft Courses (தமிழ் மொழி மூலம்)**



✲ Mechanical Craftsman Pratice

(லேத் வெல்டிங் பிற்றிங் பயிற்சி)



✲ Electrical Wiring & Installtion Pratics

(மின் இணைப்பும் நிர்மாணமும்)

✲ Automobile Technology

(மோட்டார் வாகன தொழில்நுட்பம்)

✲ Radio & T.V. Servicing

(றேடியோ, ரீ.வீ. பழுதுபார்த்தல்)





✲ Foundry Pratice

(வார்ப்பு பயிற்சி)

✲ Air Conditioning & Refrigeration

(குளிரூட்டுதல் பயிற்சி)

Duration : 6-12 Months

Facilities

☞ LIBRARY

☞ HOSTEL

☞ SPORTS

**Application Forms available at**

☞ JCIT, Vaddukaddai

☞ Undergraduates Department, Jaffna College (Hospital Road, Jaffna)

DIRECTOR,

**Jaffna College Institute of Technology,**

Vaddukoddai.

(C/20255)


## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் எழுதுநர்

திருமதி விஜயாம்பிகை கணேசலிங்கம் அவர்களின் அன்புத் தாயாரும்

எமது சங்கத்தின் தலைவர்

சுப்பிரமணியம் கணேசலிங்கம் அவர்களின் அன்பு மாமியாருமாகிய

### திருமதி நாகம்மா சின்னத்துரை

அவர்கள்

அமரத்துவம் அடைந்ததையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது இரங்கலைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுந்தீவு.

(97104)

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் சுப்பிரமணியம்

(இளைப்பாறிய அதிபர்)

காரைநகர், களபூமி, திக்கரையைப் பிறப்பிடமாகவும், தற்போது 124/1, இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய பொன்னம்பலம் சுப்பிரமணியம் 11.01.2002 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - செல்லம்மா தம்பதியினரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சேதுப்பிள்ளையின் (ஈஸ்வரி ரீச்சர், இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், சரவணபவான் (ஜேர்மனி), சபாநடேசன் (டென்மார்க்), சர்வேஸ்வரன், சசிகலா, கவிதா (B.Com. (Hons) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரதிவதனா (ஜேர்மனி), சிவமங்கை (டென்மார்க்), பத்மநாதன் (ஆசிரியர், புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை) ஆகியோரின் அருமை மாமனாரும் சிந்துஜா, பிரவிஜா, செந்தூரன், மயூரன், லக்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2002) புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு காரைநகர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்வை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*V.N. பத்மநாதன்*
*மில் றோட்,*
*இடைப்பிட்டி,*
*காரைநகர்.*

(C/20303)

தகவல்:
சு.சேதுப்பிள்ளை
(ஈஸ்வரி ரீச்சர்)
(மனைவி)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.01.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.